# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2016-2017

### மானியக் கோரிக்கை எண் 36


## ஓ. பன்னீர்செல்வம்

நிதி, பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்தத் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு
**2016**

## பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | முக்கிய நடவடிக்கைகள் | 3 |
| 3. | துறையின் செயல்பாடுகள் பற்றிய குறிப்பு | 6 |
| 4. | ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒதுக்கீட்டில் சீரான வளர்ச்சி | 6 |
| 5. | பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012) | 8 |
| 6. | பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017) | 8 |
| 7. | பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் ஆண்டு வாரியான ஒதுக்கீடுகளும் இதுவரை செய்யப்பட்ட செலவினங்களும். | 8 |
| 8. | 2014–15 ஆம் ஆண்டுத் திட்டம் | 10 |
| 9. | 2015–16 ஆம் ஆண்டுத் திட்டம் | 10 |
| 10. | 2016–17 ஆம் ஆண்டுத் திட்டம் | 11 |
| 11. | திட்டப் பணிகள் குறித்து ஆய்வு | 11 |
| 12. | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை மறுசீரமைத்தல் | 11 |
| 13. | இருபது அம்சத் திட்டம் 2006–ன் ஆய்வு | 21 |
| 14. | பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணித்து ஆய்வு செய்தல் | 22 |
| 15. | புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு | 23 |
| 16. | புள்ளிவிவர தகவல் சேகரிப்பு, தொகுப்பு மற்றும் பரப்புதல் | 25 |
| 17. | பெருந்திட்டங்கள் மற்றும் பணிகளை மதிப்பீடு செய்தல் | 25 |
| 18. | ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பது | 26 |

| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 19. | மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம், தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் | 28 |
| 20. | புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு | 36 |
| 21. | கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் அதிகளவில் ஒருங்கிணைந்து செயலாற்றுதல் | 37 |
| 22. | சிறப்புத் திட்டங்கள், திட்டப் பணிகளைச் செயல்படுத்துதல் | 38 |
| 23. | சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 39 |
| 24. | மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக தொலைவில் உள்ள மலைப்பாங்கான பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்தல் | 44 |
| 25. | சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள் | 45 |
| 26. | மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி | 46 |
| 27. | தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பை நிறுவுதல் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஏற்படுத்துதல் | 47 |
| 28. | துறைத் தலைவர்கள் | 48 |
| 29. | மாநிலத் திட்டக்குழு | 48 |
| 30. | பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை | 58 |
| 31. | மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை | 82 |
| 32. | சென்னை மெட்ரோ இரயில் திட்டம் | 87 |
| 33. | கட்டம்–I இன் நீட்டிப்பு மற்றும் கட்டம்–II | 91 |

# மானியக் கோரிக்கை எண் 36

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

''நான் இந்த மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். அவர்கள் அனைவரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப தமிழக அரசு திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்தி வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கவும், பெண்களுக்காகப் பல நலத்திட்டங்கள் உருவாக்கிச் செயலாக்கவும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் எவருமே இருக்கக் கூடாது என்ற இலட்சியத்தை நிறைவேற்றிடவும் அயராது பாடுபடுவதே எனது குறிக்கோள்''

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**புரட்சித் தலைவி அம்மா** அவர்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடுத்த இரண்டு ஐந்தாண்டுத் திட்ட கால வரம்பை கருத்தில் கொண்டு, 2023ஆம் ஆண்டு இறுதியில் மாநிலம் எய்த வேண்டிய இலக்குகளைக் கொண்ட, ''தொலைநோக்குத் திட்டம் – தமிழ்நாடு 2023''ஐ 22 மார்ச், 2012 அன்று வெளியிட்டுள்ளார்கள். இந்த தொலைநோக்குத் திட்டம் – தமிழ்நாடு 2023 நாட்டிலேயே மிகச் சிறந்த உள் கட்டமைப்பு

வசதிகளுடன் கூடிய மாநிலமாகவும், மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளில் இந்தியாவில் முதன்மை மாநிலமாகவும், நமது மாநிலத்தை உயர்த்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மனிதவள மேம்பாட்டின் அனைத்து குறியீடுகளிலும், தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிடுவதை, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. வேகமான, நீடித்து நிலைக்கத்தக்க மற்றும் அனைவரும் பங்கேற்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதே இந்த பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த திட்ட நடைமுறையின் விளைவாக, வறுமை ஒழிக்கப்படுவதோடு, கூடுதலான மற்றும் மேம்பட்ட வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, இம்மாநில மக்களின் ஒட்டு மொத்த வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் வாய்ப்பு ஏற்படும்.

மாநிலத்திற்கான ஆண்டுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்தல் மாநிலத் திட்டச்செலவினங்கள், இருபது அம்சத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்தல் ஆகியவை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் அடிப்படைப் பொறுப்புகளாக இருந்தன. மத்திய திட்டக்குழு கலைக்கப்பட்டு, வரவு செலவுத் திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராத பகுதிகள் ஒன்றாக சேர்க்கப்பட்டதால் இத்துறையின் செயல்பாடுகள் மாற்றம் பெறும். தமிழ் நாட்டில் வளர்ச்சி சார்ந்த திட்டங்களுக்கான நீண்டகால செயல் உத்திகள் அடிப்படையில் திட்டமிடுதல், இடைப்பட்ட கால செயல்பாடு அடிப்படையில் திட்டமிடுதல் மற்றும் அம்முயற்சிகளில் மிக அதிகமான கொள்கை ஒருங்கிணைப்பிணை

உறுதிப்படுத்துதல் ஆகியவை இத்துறையின் செயல்பாடுகளாக அமையும். நிர்வாகத் துறைகளால் தயார் செய்யப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த கோப்புகளை இத்துறை கூர்ந்தாய்வு செய்கின்றது. முழுமையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்தும் மற்றும் நிர்வாகத்துறை என்ற முறையில் மாநிலத்திட்டக்குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை, கொள்கைகளை வகுக்க பயன்படுத்திக் கொள்கிறது. மேலும், இத்துறை மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்ட புதிய அமைப்பான “நிதி ஆயோக்” உடன் கலந்துரையாடும் மாநில அரசின் முகமைத் துறையாகும். இத்துறை, அரசு மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்கிறது. இத்துறை, புவியியல் தகவலமைப்பு மூலம் மின்–ஆளுமை திட்டம் (e-governance), ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுப்பது மற்றும் சிறப்பு முயற்சிகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் உட்பட சிறந்த, புதுமையான பல்முனைத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. துறையின் வலைத் தளமான *www.tn.gov.in/department/23*-ல் இத்துறையின் செயல்பாடுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.0 முக்கிய நடவடிக்கைகள்

i. ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் முந்தைய மத்திய திட்டக்குழு உடன் தொடர்பு கொண்டு தயாரித்து வந்தது.

இத்துறை புதிய அமைப்பான “நிதி ஆயோக்” உடன் இணைந்து நீண்டகால செயல் உத்திகள் மற்றும் இடைப்பட்ட கால செயல்பாட்டுத் திட்டமிடுதலை நடைமுறைப்படுத்துதல்;

ii. தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல், ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைநிலை ஆய்வு செய்தல், வளர்ச்சிக் குறியீட்டை அளவிடுதல் மற்றும் பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

iii. நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் **2030**–ஐ எய்த மாநில அரசின் முயற்சிகளுக்கு ஒருங்கிணைந்து செயல்படுதல்;

iv. மாநிலத்தின் நிலம் மற்றும் நீர் பயன்பாடு குறித்து குறிப்பான திட்டங்களின் தயாரிப்பு மற்றும் செயல்பாடுகள் மீது ஆய்வுகள் மேற்கொள்ளுவதை மேற்காணுதல்;

v. திட்டப்பணிகள், இருபது அம்ச திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ளும் திட்டங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

vi. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஆகியவற்றை நிர்வகித்தலும்;

vii. பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

viii. தொலையுணர்வு புவியியல் தகவல் அமைப்புகளை உருவாக்கி பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பது போன்ற பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் முகமைகளை உள்ளடக்கிய சிறப்பு மற்றும் புதுமையானத் திட்டங்களைச் செயல்படுத்து வதற்காக ஒருங்கிணைந்து செயல்படுதல்;

ix. சீரான பொருளாதார மற்றும் சமூக காரணிகளின் அடிப்படையில் சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலமாக திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்;

x. மாவட்ட திட்டக் குழுவின் ஒரு அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களை தயாரித்தல்;

xi. அரசுத் துறைகளில் ஆதாரங்கள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை மேம்படுத்துதல்;

xii. மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், மாநிலப் பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து பொது மற்றும் தனியார் துறைகளிலிருந்து புள்ளி விவரங்களை சேகரித்தல், தொகுத்தல், மற்றும் பரவச் செய்தல்;

xiii. திட்டப்பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்;

xiv. வரவு செலவுத் திட்டம் **2015–16**ல் அறிவிக்கப்பட்ட சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை வடிவமைத்து செயல்படுத்துதல் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

xv. மாநிலத் திட்டக்குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல்படுவதற்கான வசதிகள் செய்தல்; மற்றும்

xvi. சிறப்பு முயற்சிகள் பிரிவின் கீழ் ‘மெட்ரோ இரயில்’ போன்ற புதிய மற்றும் சிறப்பு திட்டங்களை செயல்படுத்துதல்.

## 2.0 துறையின் செயல்பாடுகள் பற்றிய குறிப்பு

துறையின் செயல்பாடுகள் ஒவ்வொன்றின் தன்மை பற்றியும் தகுதிநிலை பற்றியும் கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

## 2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒதுக்கீட்டில் சீரான வளர்ச்சி

மாநில அரசின் திட்டச் செலவினங்கள் திட்ட ஒதுக்கீடுகளைவிட சீராக அதிகரித்து அதிக வளர்ச்சி விகிதங்களை ஊக்குவிக்கும் விதமாக உள்ளது. ஒவ்வொரு ஐந்தாண்டு காலத்திற்கும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது என்பதை கீழ்கண்ட அட்டவணையில் இருந்து காணலாம்:-

(ரூபாய் கோடியில்)

| திட்டம் | ஆண்டு கள் | ஏற்பளிக் கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் | % விழுக் காடு |
|---|---|---|---|---|
| முதலாம் திட்டம் | 1951–1956 | 86 | 80 | 93.0 |
| இரண்டாவது திட்டம் | 1956–1961 | 186 | 188 | 101.1 |
| மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் | 1961–1969 | 608 | 613 | 100.8 |
| நான்காவது திட்டம் | 1969–1974 | 552 | 559 | 101.3 |
| ஐந்தாவது திட்டம் | 1974–1979 | 1,122 | 1,165 | 103.8 |
| ஆறாவது திட்டம் | 1980–1985 | 3,150 | 3,645 | 115.7 |
| ஏழாவது திட்டம் | 1985–1990 | 5,750 | 6,317 | 109.9 |
| ஆண்டுத் திட்டம் | 1990–1991 | 1,450 | 1,591 | 109.7 |
| ஆண்டுத் திட்டம் | 1991–1992 | 1,600 | 1,726 | 107.9 |
| எட்டாவது திட்டம் | 1992–1997 | 10,200 | 14,024 | 137.5 |
| ஒன்பதாவது திட்டம் | 1997–2002 | 25,000 | 25,036 | 100.1 |
| பத்தாவது திட்டம் | 2002–2007 | 40,000 | 43,568 | 108.9 |
| பதினோராவது திட்டம் | 2007–2012 | 85,344 | 92,656 | 108.6 |
| பன்னிரெண்டாவது திட்டம் | 2012–2017 | 2,11,250 | 2,31,498 * | – |

* **2015–16**ஆம் ஆண்டு கணக்குகள் முன் மதிப்பீடு மற்றும் **2016–17** வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

## 2.2 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007-2012)

மார்ச் 2012 ல் முடிவடைந்த பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 113 சதவீதம் அதிகரித்து, ரூபாய் 85,344 கோடி ஒதுக்கீட்டளவிற்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டம், 2007–2012 திட்டக் காலத்தில் மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 9 சதவீதத்தை அடைவதற்கான நோக்கம் கொண்டிருந்தது.

## 2.3 பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012-2017)

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017), பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 148 சதவீதம் அதிகரித்து, 2,11,250 கோடி ரூபாய் ஒதுக்கீட்டளவில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட, நிலைக்கத்தக்க மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை இத்திட்ட காலத்தில் எய்துவதை உறுதி செய்யும் வகையிலும், மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 11 சதவீதத்தை அடைவதற்கான நோக்கமும் கொண்டுள்ளது. இத்திட்டம் “தொலைநோக்குத் திட்டம் – தமிழ்நாடு 2023” ல் உள்ள குறிக்கோளை அடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 2.3.1 பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் ஆண்டுவாரியான ஒதுக்கீடுகளும் இதுவரை செய்யப்பட்ட செலவினங்களும்.

**ஆண்டுவாரியான ஒதுக்கீடு/செலவினம்**

**பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கான ஆரம்ப திட்ட ஒதுக்கீடு ரூ.2,11,250 கோடி.**

(ரூபாய் கோடியில்)

| வருடம் | ஒதுக்கீடு 2012–2017 | செலவினம் 2012–2016 |
|---|---|---|
| 2012-13 | 28,000 | 28,528 |
| 2013-14 | 37,128 | 37,745 |
| 2014-15 | 50,660 | 51,330 |
| 2015-16 | 55,100 | 55,803 (த) |
| 2016-17 | 60,610 | - |
| **மொத்தம்** | **2,31,498** | **1,73,406** |

(த) தற்காலிகமானது

**பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் துறைவாரியான ஒதுக்கீடுகளும் செலவினங்களும்**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | துறை | ஒதுக்கீடு 2012-17 | செலவினம் 2012-16 |
|---|---|---|---|
| 1. | வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்தவை | 25,033 | 15,053 |
| 2. | ஊரக வளர்ச்சி | 42,059 | 26,673 |
| 3. | எரிசக்தி | 10,088 | 15,224 |
| 4. | தொழில் மற்றும் கனிமங்கள் | 5,764 | 4,000 |
| 5. | போக்குவரத்து | 21,107 | 14,692 |
| 6. | சமூக சேவைகள் | 1,16,296 | 89,791 |
| 7. | ஏனையவை | 11,151 | 7,973 |
| | **மொத்தம்** | **2,31,498** | **1,73,406** |

### 2.3.2 2014–15 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012–17) மூன்றாம் ஆண்டான ஆண்டுத் திட்டம் 2014–15, 50,660 கோடி ரூபாய் [38,105.27 கோடி ரூபாய் (மாநில திட்டம்) + 12,554.73 கோடி ரூபாய் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் மத்திய அரசின் பங்கு)] ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு முதல், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் உள்ள மத்திய அரசின் பங்கு, மாநில திட்ட ஒதுக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. பல மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களில் மத்திய அரசின் நிதி உதவியில் குறைவு இருந்தாலும் கூட திட்டச் செலவினமானது ரூ.51,330.25 கோடியாக இருந்தது. இது திட்ட ஒதுக்கீட்டைவிட அதிகமாகும்.

### 2.3.3 2015-16 ஆம் ஆண்டுத் திட்டம்

மத்திய அரசானது மத்திய திட்டக்குழுவிற்குப் பதிலாக “நிதி ஆயோக்” என்னும் புதிய அமைப்பினைத் தோற்றுவித்தது. மாநிலங்களின் முதலமைச்சர்களைக் கொண்ட ஆட்சி மன்றக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் 08.02.2015 அன்று புதுதில்லியில் நடைபெற்றது. 2015–2016 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீட்டை இறுதி செய்வதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் எதுவும் நிதி ஆயோக்கிடமிருந்து கிடைக்கப் பெறவில்லை. எனினும், 2015–2016 வரவு செலவுத் திட்டத்தில் ஆண்டுத் திட்டங்களுக்காக ரூ.55,100 கோடி ஒதுக்கப்பட்டது. துறைகளிடமிருந்து பெறப்பட்ட செலவினங்களின் அடிப்படையில் 2015–2016 ஆம் ஆண்டிலும் திட்டசெலவினம் திட்ட ஒதுக்கீட்டை விட அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.3.4 2016-17 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கடைசி மற்றும் இறுதி ஆண்டான 2016–2017 ஆம் ஆண்டு திட்டத்தினை செயல்படுத்த ரூ.60,610 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இதனையும் சேர்த்து பன்னிரெண்டாவது திட்டத்தின் திட்ட செலவினம் ஆரம்ப திட்ட ஒதுக்கீடான ரூபாய் 2,11,250 கோடியை விட ரூபாய் 2,31,498 கோடியாக அதிகரித்து திட்ட இலக்கை விட 9.58 சதவீதம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.4. திட்டப் பணிகள் குறித்து ஆய்வு

ஒவ்வொரு மாதமும் ஆண்டுத் திட்டத்தின் திட்டச் செலவினங்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் மூலம் சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக துறைகளிலிருந்து பெறப்பட்டு, நிதி ஆண்டின் இறுதிக்குள் திட்ட ஒதுக்கீடுகள் யாவும் முழுமையாக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, ஆய்வுக்காக தலைமைச் செயலாளர் அவர்கள் முன் வைக்கப்படுகிறது.

## 2.5 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை மறுசீரமைத்தல்

மத்திய அரசின் முழுமையான அல்லது பகுதி பங்களிப்புடன் மற்றும் மாநில அரசின் சொந்த நிதி பங்களிப்புடன் கூடிய மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மாநிலத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு நிதியாண்டுகளில், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில்

குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. 2014–2015ஆம் ஆண்டில், மத்திய அரசு இரண்டு குறிப்பிடத்தக்க மாற்றங்களை செய்துள்ளது. முதலாவதாக, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் மத்திய நிதி உதவி, மாநில திட்ட நிதி உதவியாகக் கருதப்பட்டது. மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து இத்திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு மாநில திட்ட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டுள்ளது. இரண்டாவதாக, மத்திய அரசு, நடைமுறையிலிருக்கும் 142 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை 66 திட்டங்களாக மாற்றி அமைத்துள்ளது. மேலும், அந்தந்த மாநிலங்களுக்குப் பொருந்தும் வகையில் வழிகாட்டி நெறிமுறைகளை திருத்தி அமைப்பதற்கு ஏதுவாக, இத்திட்டங்களுக்கான வழிகாட்டி நெறிமுறைகளை ஆய்வு செய்து தேவையான மாற்றங்கள் செய்வது குறித்த ஆலோசனைகளைத் தெரிவிக்கும்படி மாநில அரசிடம் மத்திய அரசு கோரியது. இதன்படி, தமிழக அரசு, ஒவ்வொரு திட்டங்கள் மீதான விரிவான கருத்தினையும், பரிந்துரைகளையும் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இப்பரிந்துரைகளில், சில மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், பல திட்டங்களின் பரிந்துரைகள் மீதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை.

இதற்கிடையில், பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில், 2015–2016–ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில், மத்திய அரசின் வரி தொகுப்பிலிருந்து 2014–2015–ஆம் நிதியாண்டில் 13–வது நிதிக்குழுவின் பரிந்துரையான 32%–ல் இருந்து 42%ஆக உயர்த்தி மாநிலங்களுக்கு மத்திய அரசு பகிர்ந்தளித்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் கூடுதல் நிதி உதவி திட்டங்களுக்கான பங்களிப்பினை மாற்றியமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன் காரணமாக, மத்திய அரசின் **2015–16–**ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில், சில மத்திய நிதி உதவி பெறும் திட்டங்கள் மத்திய அரசின் முழுமையான பங்களிப்புடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும் அதே வேளையில், குறிப்பிட்ட சில மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களை மாற்றியமைக்கப்பட்ட பங்களிப்பு விகிதங்களுடன் செயல்படுத்தவும், **8** மத்திய நிதி உதவிபெறும் திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதி உதவியினை முழுவதும் நிறுத்தவும் முடிவு செய்தது. இந்த நிறுத்தப்பட்ட திட்டங்களுக்கு, மாநில நிதி ஆதாரங்களிலிருந்து தொடர்ந்து நிதி வழங்குவது குறித்து முடிவெடுக்கும்படி மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக்கொண்டது.

தமிழகத்தை பொறுத்தவரை, **14**வது நிதிக்குழுவின் பரிந்துரையின் விளைவாக எந்த ஒரு கூடுதல் நிதியும் மாநில அரசுக்கு கிடைக்கவில்லை. மத்திய அரசின் வரி வருவாயிலிருந்து அனைத்து மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கும் பங்கு அதிகரித்தபோதிலும் அனைத்து இனங்களிலும் மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதி அதிகரிக்காது என எதிர்பார்க்கப்படுகிறது. **14**வது நிதி குழுவின் அறிக்கையில், **2011–12–**ஆம் நிதியாண்டில் மாநிலங்களுக்கான மொத்த நிதி பரிமாற்றம் **53.7** சதவீதமாக இருந்தது என்றும், ஆனால், **2015–16–**ஆம் நிதியாண்டிலிருந்து இது **49** சதவீதமாக மட்டுமே இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மிக முக்கியமாக, தமிழகத்தைப் பொறுத்தவரை, மத்திய வரித் தொகுப்பிலிருந்து

பகிர்ந்தளிக்கப்படும் வரியானது **4.969** சதவீதத்திலிருந்து **4.023** சதவீதமாக குறைந்துள்ளது. இது **19.04** சதவீதம் சரிவைக் காட்டுகிறது. மேலும், தமிழகத்திற்கு சிறப்பு மானியங்கள் எதுவும் மத்திய அரசால் வழங்கப்பெறவில்லை. வருவாய் பற்றாக்குறை மானியங்கள் பெறுவதற்கும் மாநில அரசுக்கு வாய்ப்பு இல்லை. எனவே, இடையில் நிறுத்தப்பட்ட மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தவும், சில குறிப்பிட்ட திட்டங்களில் குறைக்கப்பட்ட மத்திய நிதியுதவியை அதே அளவில் ஈடு செய்ய மாநில அரசால் கூடுதல் நிதி வழங்குவதற்காகவும், தமிழ்நாடு அரசால் கணிசமான கூடுதல் முயற்சியை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

புது டில்லியில் **8.2.2015** அன்று நிகழ்ந்த நிதி ஆயோக்கின் ஆட்சி மன்றக் கூட்டத்தில், திருத்தியமைக்கப்பட்ட மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கான அளவுகோல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து கீழ்காணும் விரிவான கருத்துரைகளை மாநில அரசு முன்வைத்துள்ளது.

i. மாநிலங்களுக்கிடையிலான செயல்திறன் வேறுபாடுகள் மற்றும் வேறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் முதன்மை திட்டங்களின் வடிவமைப்பில் போதுமான நெகிழ்வுதன்மை இருக்க வேண்டும். திட்ட வடிவமைப்பு, உள்ளூர் தேவைகளின் அடிப்படையிலான திட்டங்களை மாநிலங்கள் செயல்படுத்துவதற்காக, அதிக அளவிலான நெகிழ்வுத்தன்மையினை அனுமதிக்கும் விரிந்த

துறைவாரியான நிதி ஒதுக்கீடுகளை அளிப்பதாக இருக்க வேண்டும்.

ii. மத்திய நிதி உதவியின் மாநிலவாரியான ஒதுக்கீட்டிற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் வரன்முறை, மிகச்சிறந்த நடுநிலைத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அது, அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ஏற்கனவே தங்கள் சொந்த நிதியாதாரங்களை முதலீடு செய்து குறிப்பிடத்தக்க அளவுக்கான வளர்ச்சி பெற்ற மாநிலங்களை தண்டிப்பதாக அமையக்கூடாது.

iii. சிறந்த முறையில் திட்டமிடுவதற்கும், திட்டங்களை செயல்படுத்துவதற்கும், குறிப்பிட்ட ஆண்டிற்கான ஒதுக்கீட்டு அளவுகள் குறித்து தெளிவான, முன்னரே கணிக்கத்தக்க மற்றும் நிச்சயத்தன்மை உடைய நிதி ஒதுக்கீட்டிற்கான வரன்முறைகள் அமைய வேண்டும். மேலும், வருடாந்திர ஒதுக்கீடு குறித்த தகவல்கள் போதுமான கால அளவுக்கு முன்னரே தெரிவிக்கப்படவேண்டும்.

**iv. மாநிலங்களின் சொந்த முன்னுரிமைச் செலவினங்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டச் செலவுகளில் மாநிலங்களின் பங்கு அதிக பட்சம் 25 சதவீதம் என்ற அளவுக்குள் அமையுமாறு வரையறுக்கப்படவேண்டும்.**

v. மத்திய அரசின் திட்டத்தினைப் போன்றதொரு திட்டம், மாநில அளவில் ஏற்கனவே நடைமுறையிலிருந்தால் மத்திய திட்ட நிதியினை மாநிலத் திட்ட நிதியோடு இணைத்துக் கொள்ள அனுமதிப்பதற்கு ஏற்றவாறு வழிகாட்டு நெறிமுறைகள் அமைய வேண்டும்.

vi. உறுதியளிக்கப்பட்ட ஒதுக்கீடு, எவ்வித இடைக்காலக் குறைவுகளுமின்றி முழுமையாக அளிக்கப்பட வேண்டும். மத்திய அரசின் பங்கு, ஒரு ஆண்டில் இரண்டு தவணைகளுக்கு மேற்படாத வகையில் அளிக்கப்பட வேண்டும். முந்தைய ஆண்டுகளின் விடுபட்ட நிதி, நடப்பு ஆண்டு நிதியினை வழங்குவதற்கு முன்பாகவே அளிக்கப்பட்டு விடவேண்டும்.

vii. நிதி வழங்குவதற்கான வரையறைகளில், விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்ப குறியீடுகள் பயன்படுத்தப்படும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டு, அதன் பயனாக வழங்கப்படும் நிதியின் அளவு தன்னியல்பாகவே (automatic) உயர்த்தப்பட வழிவகை செய்ய வேண்டும்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் பங்களிப்பு விகிதம் **90:10** முதல் **50:50** வரை உள்ள விகிதங்களின் அடிப்படையில் இருந்தது. முதலமைச்சர்களைக் கொண்ட துணை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசு தற்போது உள்ள **66** மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை **28** பொதுவான திட்டங்களாக மாற்றி

அமைத்துள்ளது. இந்த 28 பொதுவான திட்டங்களில், 6 திட்டங்கள் மிக முக்கியத் திட்டங்களாகவும் 20 திட்டங்கள் முக்கியத் திட்டங்களாகவும் மீதமுள்ள 2 திட்டங்கள் விருப்ப அடிப்படையிலான திட்டங்களாகவும் வகைப்படுத்தப் பட்டுள்ளது. மிக முக்கியத் திட்டங்களின் பங்களிப்பு விகிதம் தற்போது உள்ள விகிதத்திலேயே தொடரும். முக்கியத் திட்டங்களின் பங்களிப்பு விகிதம் ஒரே விதமாக 60:40 என்ற விகிதத்தில் இருக்கும். விருப்ப அடிப்படையிலான திட்டங்களின் பங்களிப்பு விகிதம் 50:50 என்ற விகிதத்தில் இருக்கும். இத்திட்டங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

**A. மிக முக்கியத் திட்டங்கள்**

1. தேசிய சமூக நிதியுதவி திட்டம்.

2. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்.

3. ஆதிதிராவிடர் மேம்பாட்டுக்கான பொதுவான திட்டம்.

4. பழங்குடியினர் மேம்பாட்டுக்கான பொதுவான திட்டம்.

5. சிறுபான்மையினர் மேம்பாட்டுக்கான பொதுவான திட்டம்.

6. பிற்படுத்தப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பிற பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிரிவினர் மேம்பாட்டுக்கான பொதுவான திட்டம்.

## B. முக்கியத் திட்டங்கள்

7. பசுமை புரட்சி (விவசாய அபிவிருத்தித் திட்டம் மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம்)
8. வெண்மை புரட்சி (கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம்)
9. நீலப் புரட்சி (ஒருங்கிணைந்த மீன்வள மேம்பாடு)
10. பிரதம மத்திரி விவசாய நீர்பாசனத் திட்டம்
    a. அனைத்து விளை நிலங்களுக்கும் நீர்பாசனம்
    b. குறைந்த நீர்பாசனத்தில் அதிகவிளைச்சல்
    c. ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்
    d. விரைவுப்படுத்தப்பட்ட நீர்பாசன வசதி மற்றும் வெள்ளத் தடுப்பு மேலாண்மைத் திட்டம்
11. பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம்
12. பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம்
    a. பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் – ஊரகம்
    b. பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டம் – நகர்புறம்

13. தேசிய குடிநீர் இயக்கம்

14. தூய்மை இந்தியா இயக்கம்

    a. தூய்மை இந்தியா இயக்கம் – ஊரகம்

    b. தூய்மை இந்தியா இயக்கம் – நகர்புறம்

15. தேசிய சுகாதார இயக்கம்

    a. தேசிய ஊரக சுகாதார இயக்கம்

    b. தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம்

    c. உயர்தர சுகாதார பாதுகாப்புத் திட்டம்

    d. சுகாதாரம் மற்றும் மருத்துவக் கல்வியியல் மனிதவள மேம்பாடு

    e. ஆயுஷ் தேசிய இயக்கம்

16. தேசிய நல்வாழ்வுத் திட்டம்

17. தேசிய கல்வி இயக்கம்

    a. அனைவருக்கும் கல்வித் திட்டம்

    b. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்

    c. ஆசிரியர் பயிற்சி மற்றும் முதியோர் கல்வி

    d. தேசிய உயர் கல்வித் திட்டம்

18. மதிய உணவுத் திட்டம்

19. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள்

    a. அங்கன்வாடி பணிகள்

b. தேசிய ஊட்டச் சத்து இயக்கம்

c. மகப்பேறு உதவித் திட்டம்

d. வளரிளம் பெண்களுக்கானத் திட்டம்

e. ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

f. தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம்

**20.** பெண்கள் பாதுகாப்பு மற்றும் அதிகாரமளிக்கும் திட்டம் (பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் வளர்ப்பு, அனைத்து சேவை மையம், பெண்கள் உதவி மையம், விடுதிகள், இரவு தங்கும் விடுதிகள், பாலினம் சார்ந்த நிதி ஒதுக்கீடு ஏனையவை)

**21.** தேசிய வாழ்வாதார இயக்கம்

a. தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்

b. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம்

**22.** வேலை மற்றும் திறன் மேம்பாடு

a. வேலை வாய்ப்பினை பெருக்கும் திட்டம்

b. பிரதம மந்திரி திறன் அபிவிருத்தித் திட்டம்

**23.** சுற்றுச் சூழல், வனம் மற்றும் வன உயிரினங்கள்

a. தேசிய பசுமை இந்தியா இயக்கம்

b. ஒருங்கிணைந்த வனபுகலிட மேம்பாட்டுத் திட்டம்

c. இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

d. தேசிய நதிகள் பாதுகாப்புத் திட்டம்

**24.** நகர்புற மறுசீரமைப்பு இயக்கம் (அம்ருத் மற்றும் திறன்மிகு நகரங்களுக்கான இயக்கம்)

**25.** காவல்துறை நவீனமயமாக்குதல் (பாதுகாப்பு தொடர்பான செலவினங்கள்)

**26.** நீதித்துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகள் (ஊர் பஞ்சாயத்துகள் மற்றும் மின்ஆளுமை நீதிமன்றங்கள்)

**C. விருப்ப அடிப்படையிலான திட்டங்கள்**

**27.** எல்லைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**28.** சியாமா பிரசாத் முகர்ஜி ஊரக மற்றும் நகர்புற இயக்கம்

## 2.6 இருபது அம்சத் திட்டம் 2006—ன் ஆய்வு

இருபது அம்சத்திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்பு திட்ட நடவடிக்கையாக, **1975**ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு **1982, 1986** மற்றும் **2006** ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டு **2006**ஆம் ஆண்டில் “இருபது அம்சத் திட்டம் **2006**” எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது**.**

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்**.**

இத்திட்டம் வறுமையினை குறைத்தல், வேலைவாய்ப்பினை பெருக்குதல், கல்வி, வீட்டு வசதி , சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடப்பட்ட அம்சங்களை கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம்–2006 குறித்த மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் / நிறுவனங்களின் பல்வேறு இனவாரியான செயல்பாடுகள் குறித்த ஆய்வு அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் (Monitorable Items) செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு காலாண்டும் இத்துறையினால் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய புள்ளி இயல் மற்றும் திட்டசெயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

## 2.7 பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணித்து ஆய்வு செய்தல்

100 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்ட மதிப்பீட்டிலான பெரிய உள் கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றத்தை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையினால் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்ட அலுவல் குழு ஆய்வு செய்து கண்காணிக்கிறது. இந்நோக்கத்திற்காக பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் பின்வரும் துறைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது:

i) எரிசக்தி,

ii) தொழில் மற்றும் தகவல் தொழில் நுட்பம்,

iii) நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள்,

iv) சென்னை பெருநகருக்கான உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும்

v) இதர நகர உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் குடிநீர் திட்டங்கள்.

உயர்மட்ட அலுவல் குழு மேற்கண்ட திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை நிறைவேற்றுவதில் உள்ள முட்டுக் கட்டைகளைக் கண்டறிந்து, துறைகளுக்கிடையே தேவைப்படும் ஒத்துழைப்பு உட்பட இது போன்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பற்றி ஆலோசனைகளை வழங்குகிறது.

## 2.8 புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு

புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு செயல்பாடுகளை அனைத்து அரசுதுறைகளிலும் ஒருங்கிணைத்து சீரிய முறையில் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.19 திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 15.02.1984 –ன்படி மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழு உருவாக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, 2009ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப துறை மாநிலத்தில் புவியியல் தகவல்அமைப்பு மற்றும் தொலையுணர்வு முறையை செயல்படுத்தும் முனைப்பு துறையாக அமைக்கப்பட்டது. அனைத்து தொலையுணர்வு விவரங்கள் மற்றும் அடிப்படை

பகுப்பாய்வு வரைபடங்களை பராமரிக்கும் பணிகளை தமிழ்நாடு புவியியல் தகவல் அமைப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின்–ஆளுமை (TNeGA) முகமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 05.08.2016 அன்று, தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட புவிசார் தரவுகளை, 42 புவிசார் அடுக்குகளாக தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பிற்கான இணையதள பயன்பாட்டில் இணைத்து தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து துறைகளுக்கும் தேவையான விவரங்கள் மற்றும் வரைபடங்களும் மத்திய விவர தொகுப்பிலிருந்து பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில ஒருங்கிணைப்பு குழு புவியியல் தகவல் அமைப்பு / தொலையுணர்வு பணியினை ஆய்வு செய்து வருகிறது. முதன்மை செயலாளர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் முதன்மை செயலாளர், தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியோரின் கூட்டுத் தலைமையின் கீழ் ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டு பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, புவியியல் தகவல் அமைப்பு/ தொலையுணர்வு திட்டங்களுக்கான கருத்துருக்கள் மீது முடிவுகள் மேற்கொள்ளுவதை மேற்பார்வையிட்டு வருகிறது. தமிழகத்தின் புவியியல் தகவல் அமைப்புக்கான பூகோள வரைபடத்தின் அடிப்படை அலகுகளை ஒத்திசைவு செய்து நிலைப்படுத்தவும், அந்த வரைபடத்தின் பல்வேறு துறைகளில் தற்போது நடைமுறையில் உள்ள பலதரப்பட்ட அலகுகளை

ஒன்றிணைக்கவும் இக்குழு முழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

## 2.9 புள்ளிவிவர தகவல் சேகரிப்பு, தொகுப்பு மற்றும் பரப்புதல்

இத்துறை மாநிலம் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவைகளை வழங்குவதில் ஓர் ஒருங்கிணைப்பு மையமாக உள்ளது. அத்தகைய விவரங்கள் அரசுத் துறைகளில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்களிலிருந்தும், தனியார் துறைகள் உட்பட சேகரித்து தொகுக்கப்படுகின்றன.

துறைகளுக்குத் தேவைப்படும் அனைத்துப் புள்ளி விவரங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையின் மூலமாக பெறப்படுகின்றன. இத்துடன் நாட்டின் ஏனைய மாநிலங்களின் புள்ளி விவரங்களை, நமது மாநிலத்தின் தொடர்புடைய செயல்பாடுகளின் புள்ளி விவரங்களோடு ஒப்பு நோக்குவதற்கும் இத்துறை தகவல்களைச் சேகரிக்கிறது.

## 2.10 பெருந்திட்டங்கள் மற்றும் பணிகளை மதிப்பீடு செய்தல்

பல்வேறு அரசுத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்து அத்திட்டங்களின் பயன்கள் உண்மையான பயனாளிகளுக்கு சென்றடைந்ததை உறுதி செய்வது இத்துறையின் முக்கியமான பணியாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குநரகம் மூலம் திட்டங்களின் செயல்பாடுகளை உடனுக்குடனும், திட்டங்கள் முடிக்கப்பட்ட பின்னரும் மதிப்பீடு செய்யப்படுகிறது. திட்டம்,

வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முதன்மை செயலாளர் தலைமையில் இயங்கும் குழுவின் ஒப்புதலைப் பெற்று மதிப்பீடு செய்யும் பணி, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குனரகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. மதிப்பீடு செய்யப்பட வேண்டிய திட்டங்களை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குனரகம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் தொடர்புடைய துறைகளுடன் கலந்து செயல்முறை மற்றும் ஆராய வேண்டிய வழிமுறைகளை இறுதி செய்கிறது. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, ஆலோசகர்களின் ஆலோசனைகளைப் பெறவும் தேவைகளின் அடிப்படையில் ஆராய்ச்சி உதவியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும், மதிப்பார்ந்த நிறுவனங்களுக்கு மதிப்பீடு ஆய்வுகளை மேற்கொள்ளவும் செய்யும். மாநில திட்டக்குழுவின் துணைத் தலைவரின் தலைமையில் இயங்கும் அறிவுரைக் குழுவிற்கு மதிப்பீடு வரைவு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். இம்மதிப்பீடுகளின் வெளியீடுகள் களப்பணி விவர சேகரிப்புகளின் முடிவுகள் முறையான பகுப்பாய்வு மற்றும் திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் திட்டங்களை இடையிடையே சரிசெய்வதற்கும் கொள்கைகளை மாற்றுவதற்கும் ஆலோசனை வழங்கவும் ஆவணங்களாக வெளியிடப்படுகின்றன. இந்த ஆய்வறிக்கைகள் www.tn.gov.in/dear/index.htm என்ற அரசின் இணைய தளத்திலும் வெளியிடப்படுகின்றன.

## 2.11 ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பது

**8.8.2014** அன்று, விதி எண் **110**–இன் கீழ் சட்ட மன்ற பேரவைக்கு அளித்த அறிக்கையில், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள், சிறப்பான நிர்வாகத்தின் முக்கிய திட்ட கூறு ஆகிய ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார். அரசின் வெவ்வேறு துறைகளின் ஓர் ஆலோசனைத் துறை என்ற முறையிலும் மாநில திட்டக்குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகியவற்றின் நிர்வாகத் துறை என்ற வகையிலும், ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கைத் தயாரிப்பதை மேம்படுத்துவதற்கு, அரசு அளிக்கும் சிறப்பு முக்கியத்துவத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை தனித் தன்மையுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசில், ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கைத் தயாரிப்பை மேம்படுத்துவதற்கு, இத்துறை, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நடைபெற்று வரும் திட்டங்களையும், பெருந்திட்டங்களையும் முறையாகக் கண்காணிப்பதும், மதிப்பீடு செய்வதும், ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை தயாரிப்புக் கட்டமைப்பில் ஒரு முக்கியமான அம்சமாகும். இந்த அரசானது, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மற்றும் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறைகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும். நடந்தேறி வருகின்ற திட்டங்கள் மற்றும் திட்டப் பணிகள் முறையாக கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். பல்வேறு அரசு திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பயன்களை பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதிகளவிலான செயல்விளைவு மதிப்பீட்டு ஆய்வுகளுடன், இடைக்கால திருத்தங்களை மேற்கொள்வதற்கும், இனிவரும் காலங்களில்

சிறப்பான மற்றும் மிகவும் பயனுள்ள திட்டங்களை வகுப்பதற்கும் இத்தகைய ஆய்வுகள் மூலம் பெற்ற படிப்பினையை பயன்படுத்த இயலும். பகுப்பாய்வு மற்றும் கொள்கை தயாரிப்பிற்கு தேவையான தரவுகள் மற்றும் தகவல்கள் உருவாக்கி தரப்படும்.

**2.11.1 மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம், தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்**

அமெரிக்காவிலுள்ள, மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (Massachussets Institute of Technology, USA), அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு (Abdul Latif Jameel – Poverty Action Lab (J-PAL)) என்பது, மிகவும் குறைந்த செலவிலும், செம்மையான முறையில், வறுமையைக் குறைக்கிற பல்வேறு கொள்கை முயற்சிகளை உருவாக்கவும் மதிப்பீடு செய்யவும் முனைப்பான ஆராய்ச்சியை செய்து வருகிற உலகம் முழுவதிலுமுள்ள வெவ்வேறு பல்கலைக் கழகங்கள் மற்றும் நிறுவனங்களில் இருக்கும் சில சிறந்த மேம்பாட்டு பொருளாதார வல்லுநர்களையும், சமூக அறிவியலாளர்களையும் கொண்ட ஓர் கட்டமைப்பாகும்.

**08.08.2014** அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண் **110**–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.**2**(ம)ம) துறையின் **02.09.2014**ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.**81**–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி

ஆதாரங்கள் அடிப்படையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அதிக பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக அரசானது, தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் – வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் **19.11.2014** அன்று கையெழுத்திடப்பட்டது. வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கியத் திட்டக் கூறுகள் வருமாறு:

**(i) கொள்கைக் குறித்த பேச்சு வார்த்தை**

தமிழ்நாடு அரசும் தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பும் தமிழ்நாடு அரசின் தலைசிறந்த கொள்கை முன்னுரிமைகளைக் கண்டறிந்து பின்வருவன பற்றி கலந்துரையாடல்களை மேற்கொள்ளும்.

(i) மாநில அளவில், படிப்படியான அளவு வீதத்தில் பெரிதாக்கி காட்டுவதற்கு முன், களப்பணி பரிசோதனைக்கு முனைப்புடன் உட்படுத்தப்படும், புதுமையான வளவாய்ப்புத் தீர்வுகளைக் கூட்டாகக் கண்டறிதல்.

(ii) இந்தியாவின் மற்ற பகுதியிலும் உலகளவிலும் பரிசோதிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் செயல்படுத்தக் கூடிய கொள்கை புதுமைகளைக் கண்டறிதல்.

**(ii) மதிப்பீட்டுத் திட்டங்கள்**

சாத்தியக் கூறினை அளவீடு செய்வதற்கு முன்னர், மதிப்பீடு செய்யப்பட வேண்டிய குறிப்பிட்ட நடவடிக்கைகளைத் தெரிவு செய்தல்.

**(iii) திறன் மேம்பாடு**

பின்வரும் நடவடிக்கைகள் வாயிலாக நடந்தேறி வருகிற அல்லது புதிய திட்டங்களை கண்காணித்து மதிப்பீடு (Monitoring and Evaluation) செய்யும் பணியை மேற்கொள்வதற்கு, உள்ளார்ந்த திறன் மேம்படுத்துதலில், தமிழ்நாடு அரசுக்கு, தெற்கு ஆசியாவின் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு உதவும்.

**(அ) கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுத் தேவைகளை அறுதியிடல்**

தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பானது, நடைமுறையிலுள்ள கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டு தகவல் ஆதாரங்கள், கண்காணித்தலில் அவற்றின் பயன்பாடு, முடிவுகளை/விளைவுகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை தொடர்பான வேறுபாடுகள் ஆகியவற்றை கண்டறிவதற்கு, மதிப்பீடு தேவைகளை கண்டறியும் பயிற்சி முறை ஒன்றை நடத்தும்.

**(ஆ) மதிப்பீட்டு வழிகாட்டி குறிப்புகள்**

மதிப்பீடுகளை தொடங்கி நிருவகிப்பது குறித்த வழிகாட்டி குறிப்புகளை உருவாக்குவதற்கு மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு தொழில்நுட்ப உதவி வழங்கும்.

**(இ) திறன் மேம்பாட்டு பயிலரங்குகள்**

தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பானது, தொடர்புடைய கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு தலைப்புகள் பற்றி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கும், தேர்வு செய்யப்பட்ட செயல்படுத்தும் துறைகளுக்கும் செயல்முறை பயிற்சி அளிக்க வகைசெய்யும்.

**(ஈ) கண்காணிப்பு ஏற்பாட்டு முறைகளுக்கு தொழில்நுட்ப உதவி**

செயல் விளைவு அடிப்படையிலான கண்காணிப்பு கட்டமைப்புகளை பின்பற்றுவதற்கும், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் தேர்வு செய்யப்பட்ட செயல்படுத்தும் துறைகள், முனைப்புடன் கண்காணித்து முடிவு எடுப்பதற்கான ஏற்பாட்டு முறைகளை வலுப்படுத்துவதற்கும், தமிழ்நாடு அரசிற்கு தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு உதவி செய்யும்.

17.09.2014 அன்று தலைமைச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற முதலாவது வழிநடத்தும் குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் அப்துல் லத்தீப் ஜமீல் – வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பின் மூலமாக

கீழ்காணும் ஐந்து ஆய்வுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டன. அந்த ஆய்வுகளின் தற்போதைய நிலை கீழ்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | திட்டம் | பயன் பெறும் துறைகள் | திட்டத்தின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | திறன் வளர்ப்பின் மூலம் இளந்தொழிலாளர் சந்தையின் பயன்களை அதிகரிக்கும் திட்டம் | தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டது —அறிக்கை சம்பந்தப்பட்ட துறையிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. |
| 2. | வளரிளம் பருவத்தில் ஏற்படுகின்ற இரத்த சோகைக்கு தீர்வு காண வாரந்தோறும் செறிவூட்டப்பட்ட இரும்புச்சத்து மாத்திரைகளை எடுத்துக்கொள்வதால் ஏற்படுகிற பயன்களை மதிப்பிடும் திட்டம் | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை | திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டது —அறிக்கை சம்பந்தப்பட்ட துறையிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 3. | தொற்றாத நோய்களின் பாதிப்பைக் குறைப்பதற்கு ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை கற்பிக்கும் திட்டம் | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை | திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது – அடிப்படை கணக்கெடுப்பு செப்டம்பர், 2016ல் தொடங்கப்பட உள்ளது |
| 4. | தமிழ்நாட்டில் தாய்ப்பால் கொடுப்பதால் ஏற்படும் பயன்களை அதிகரிக்க பெண்களை ஈடுபடுத்தும் திட்டம் | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை | திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டது –அறிக்கை சம்பந்தப்பட்ட துறையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முழு அளவிலான மதிப்பீடு ஆரம்பிக்கப் பட்டுள்ளது. |
| 5. | தமிழ்நாட்டில் வடமாவட்டங்களில் உள்ள தொடக்கப்பள்ளி கல்வி நடைமுறை குறித்து மதிப்பீடு செய்வதற்கான திட்டம் | பள்ளிக் கல்வி துறை | திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டது –அறிக்கை சம்பந்தப்பட்ட துறையிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது |

**28.07.2015** அன்று நடைபெற்ற இரண்டாம் வழிநடத்தும் குழு ஒப்புதலின் அடிப்படையில் அப்துல் லத்தீப் ஜமீல் – வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பின் மூலமாக பின்வரும் நான்கு ஆய்வுகளை

மேற்கொள்வதற்கு செயல்படுத்தும் துறைகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டன:–

| வ. எண் | திட்டம் | பயன் பெறும் துறைகள் | திட்டத்தின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாட்டில் உணவு செறிவூட்டல் மூலம் இரத்தசோகையை ஒழிக்கும் திட்டம் | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகிறது – முதற் கட்டமாக பொது விநியோகத் திட்ட கடைகளின் கணக்கெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது. |
| 2. | நகர்ப்புற வேலையின்மை: தமிழ்நாடு நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் திறனுக்கேற்ற வேலைகளை ஒப்பிடுவதில் ஏற்படும் இடர்பாடுகளைக் கண்டறிதல். | நகராட்சி, நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது – இத்திட்டத்தில் பயன்பெறும் துறையாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மாற்றப்பட்டுள்ளது. |
| 3. | பொது/நம்ம கழிப்பறைகளுக்கான உபயோகிப்பாளர் கட்டண வசூல் அடிப்படையிலான ஒப்பந்த வழிமுறைகளை வடிவமைப்பதன் மூலம் நீடித்த நிதி மற்றும் பொருத்தமான சேவை வழங்கும் திட்டம். | நகராட்சி, நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட துறையிடம் இருந்து திட்டத்தை தொடங்க கடிதம் பெறப்பட்டவுடன் இத்திட்டத்திற்கான ஆய்வு ஆரம்பிக்கப்பட உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 4. | தமிழ்நாட்டில் ஊரகப்பகுதிகளில் கழிப்பறை பயன்பாடுகளை ஊக்குவிக்கும் திட்டம். | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது – அறிக்கை சம்பந்தப்பட்ட துறையிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது. |

**22.12.2015** அன்று நடைபெற்ற மூன்றாம் வழிநடத்தும் குழு ஒப்புதலின் அடிப்படையில் அப்துல் லத்தீப் ஜமீல் –வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பின் மூலமாக பின்வரும் மூன்று ஆய்வுகளை மேற்கொள்வதற்கு செயல்படுத்தும் துறைகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன:–

| வ. எண் | திட்டம் | பயன் பெறும் துறைகள் | திட்டத்தின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாட்டில் வாழும் வயது முதிர்ந்தவர்களின் சமூக பொருளாதார நிலையை அறிய அமைக்கப்பட்ட குழுவின் கணக்கெடுப்பு | பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை | நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது – முதற்கட்ட ஆய்வு பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையுடன் நடத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 2. | தமிழ்நாட்டில் தாய்ப்பால் கொடுப்பதால் ஏற்படும் பயன்களை அதிகரிக்க பெண்களை ஈடுபடுத்தும் திட்டம் | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது – இதற்கான நிதி தேசிய சுகாதார திட்டத்திலிருந்து வழங்கப்பட உள்ளது. |
| 3. | தமிழ்நாட்டில் ஐந்து மாவட்டங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பள்ளிகளை தயார் நிலைப்படுத்தி குழந்தைகளின் சுகாதாரத்தை மேம்படுத்தும் திட்டம். | சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை | நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது – அடிப்படை ஆய்வு செப்டம்பர், 2016-ல் தொடங்கப்பட உள்ளது. |

## 2.11.2 புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு

வரவு செலவுத் திட்டம், 2015–2016–ல் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து, புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம் (Data Analytics Unit) உருவாக்கப்படுவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அரசிடம் குவிந்துள்ள புள்ளி விவரங்கள் நிகழ்கால அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு, மக்களுக்கு சேவைகளை சிறப்பாக கொண்டு செல்லும் நோக்குடன் அரசின் கொள்கைகளை அவ்வப்போது மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இதன் மூலமாக ஏற்படும்.

இத்தகைய மையத்தை ஏற்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடு என்பது குறிப்பிடத்தக்கது. இது ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பதற்கு முக்கிய காரணியாக அமைகிறது.

புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம் சார்ந்த கருத்துருக்களுக்கு ஒப்புதல் அளிக்கவும் அதன் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் முதன்மைச் செயலாளர், திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அவர்களை தலைவராகக் கொண்டு வழிநடத்தும் குழு ஒன்றினை அமைத்து அரசாணை (நிலை) எண்.91, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் **5.11.2015** ன் வாயிலாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### 2.11.3 கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் அதிகளவில் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்

கொள்கை தயாரிப்பு குறித்த ஆலோசனையைப் பெறுவதற்காக, சமூக அறிவியலாளர்கள் மற்றும் பிற வல்லுநர்களின் சிறப்பறிவுத் திறனை பயன்படுத்துகிற ஓர் முயற்சியாக, வெவ்வேறு கருத்துக்களை கேட்டறிந்து, அவற்றை கொள்கை தயாரிப்புக்கான முயற்சிகளில் சேர்க்கிற வகையில், வெவ்வேறு கருத்தரங்குகள் மற்றும் குழுக்கூட்டங்களில், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், இந்திய புள்ளியியல் நிறுவனம், இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பொருள் இயல் கல்வி நிறுவனம் மற்றும் IFMR போன்ற நிறுவனங்களைச் சேர்ந்த வல்லுநர்களின் பங்கேற்பை இத்துறை ஊக்குவிக்கிறது.

## 2.12 சிறப்புத் திட்டங்கள், திட்டப் பணிகளைச் செயல்படுத்துதல்

**1975–**ம் ஆண்டு முதல், தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களிடையே பெரிய வனப்பகுதிகளை எல்லைகளாகக் கொண்டும் மேலும் வடக்கு வரை நீண்டு செல்லும் மலைப்பாங்கான மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒப்பற்ற உயிரினச் சூழல்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு, செயல்படுத்தப்பட்ட இரண்டு மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை செயல்படுத்தி வந்தது. நீலகிரி மாவட்டத்தை மையமாகக் கொண்டு தனியாக செயல்படுத்தப்படும் திட்டம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்று அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில், நீலகிரி மலைப்பகுதியின் தென்பகுதியில் உள்ள ஏனைய மலைத்தொடர்கள் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டமானது கோயம்புத்தூர், திருப்பூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளிலும் கன்னியாகுமரி மற்றும் தேனி மாவட்டங்களில் முழுமையாகவும் செயல்படுத்தப்பட்டது. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலம் முழுவதற்கும் திட்ட முதலீட்டினை கணிசமான அளவு உயர்த்தி இவ்விரு திட்டங்களையும் மேலும் தொடர மத்திய அரசினை மாநில அரசானது வலியுறுத்தியது. எனினும், மத்திய அரசானது இத்திட்டங்களை **2015–16** ஆம் நிதியாண்டு முதல் மத்திய நிதியுதவியிலிருந்து நீக்கிவிட்டது. எனவே, இம்மலைப் பகுதிகளின் சுற்றுச்சூழல் முக்கியத்துவத்தைக் கருதி மாநில அரசானது இந்த இடர்பாடிலிருந்து மீளும் முயற்சியாக ரூபாய் **75.00** கோடி

ஆண்டு ஒதுக்கீட்டில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை அறிவித்துள்ளது.

### 2.12.1 சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்கள் **1975–1976** முதல் மத்திய அரசின் **90** விழுக்காடு நிதி உதவியுடனும் மீதமுள்ள **10** விழுக்காடு தொடக்க காலத்தில் கடனாகவும் பின்னர் மாநில அரசின் பங்களிப்பாகவும் செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டங்களின் முக்கிய குறிக்கோள் உயிரினப் பன்மயத்தினை தொடர்ந்து பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இயற்கைச் சூழலைப் பேணுதல் மற்றும் இயற்கைச் சூழலை மீளச்செய்வதாகும். உள்ளூர் மக்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களில் இத்திட்டங்கள் கவனம் செலுத்துவதுடன் பல்வகை உயிரினப் பெருக்கம் மற்றும் நீடித்த வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான உத்திகளின் வடிவமைப்பு மற்றும் செயலாக்கத்தில் சமுதாய பங்கேற்பை உறுதி செய்வதும் ஆகும். செயல்திறன், வெளிப்படையானத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதி செய்வதற்காக பங்கேற்கும் அணுகுமுறையின் மூலம் நீர்வரத்துப்பகுதி அடிப்படையிலான மேம்பாடு இத்திட்டத்தின் முக்கிய அம்சமாக இருந்தது. நீர்வரத்துப்பகுதி அணுகுமுறையின் முக்கிய நோக்கமானது, நீர் மற்றும் நில வளங்களுக்கு ஒரு முழுமையான அணுகுமுறையை உறுதி செய்வதுடன், இயற்கையோடு இயைந்த உயிரின வாழ்க்கைச் சூழல் மேலும் நலிவடையாமல் தடுத்தல் ஆகும்.

தமிழகத்தின் எல்லையோரப் பகுதிகளான திண்டுக்கல், மதுரை, தேனி, ஈரோடு கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் இடதுசாரி தீவிரவாதம் பரவாமல் தடுப்பதற்காக பழங்குடியினர் மற்றும் இதர மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக, மேற்கொள்ளப்பட்ட பணிகள், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களில் செயல்படுத்தப்பட்ட திட்டப் பணிகள் போன்றது ஆகும்.

மத்திய அரசின் வரவு செலவுத் திட்டம் **2015–2016**ல், மத்திய அரசானது மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் / மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியன **2015–2016** ஆம் ஆண்டு முதல் மத்திய நிதியுதவியிலிருந்து நீக்கப்படும் என்றும், அத்திட்டங்களை மாநில அரசின் நிதி ஆதாரங்களில் இருந்து தொடர்ந்து செயல்படுத்தலாம் என்றும் அறிவுறுத்தி இருந்தது. அதனைத் தொடர்ந்து உடனடியாக தமிழக அரசானது **2015–2016** ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஆண்டுக்கு ரூபாய் **75.00** கோடி முதலீட்டில் மாநிலத்தின் மலைப்பகுதிகளை உள்ளடக்கிய சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தினை அறிவித்தது. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதியானது, தமிழ்நாட்டில் கடல் மட்டத்திலிருந்து **600** மீட்டருக்கு மேலான மலைப் பகுதிகளை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த இலக்குப் பகுதிகள், **10** மாவட்டங்கள், **40** வட்டங்கள் மற்றும் **67** வளர்ச்சி வட்டாரங்களில் உள்ள **36** நகராட்சிகள், **148** பேரூராட்சிகள் மற்றும் **1266** கிராம ஊராட்சிகள் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளன. மேற்குத்

தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ஏற்கனவே சேர்க்கப்படாத ஈரோடு மாவட்டத்திலுள்ள பகுதிகள் தற்பொழுது சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறப்புப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திறகான விரிவான செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண்.40, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (தொ.நு1) துறை, நாள் **04.03.2016** **–ல்** வெளியிடப்பட்டது. தமிழ்நாடு அரசின் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையானது, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்ட மேலாண்மைக்கான மாநில அளவிலான ஒருங்கிணைப்புத் துறையாக விளங்குகிறது. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியினை ஒட்டியுள்ள இடைப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதி, வனப்பகுதியிலோ அல்லது வாழ்விடப்பகுதிக்கு அருகாமையிலோ அமையப்பெறாமல் உள்ள பகுதியாக இருப்பதால் அரசின் குறைந்த முதலீடுகள் காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்ட பகுதியாக உள்ளது. மேலும், இப்பகுதி மண் மற்றும் நீர் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்த பகுதியாக இருக்கிறது. எனவே, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது, நீர், விவசாய நிலங்கள் மற்றும் மனித வாழ்வாதாரம் ஆகியவற்றிற்கிடையில் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தக்கூடிய நீர் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் மற்றும் நீர் வாழ் உயிரின பெருக்கத்தினை உள்ளடக்கியதாகும். மேலும், இத்திட்டத்தின் மூலம் மக்கள் அவர்கள் வாழும் இடங்களிலேயே அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புக்களை

அதிகரிக்க நுண்ணிய நீர்பிடிப்புப்பகுதி அடிப்படையில் திட்டமிடுதலில் அதிக கவனம் செலுத்தப்படும்.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மண்வளப் பாதுகாப்பு, வனம் மற்றும் சுற்றுச்சூழல், தோட்டக்கலை, வேளாண்மை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கால்நடை பராமரிப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், ஊரகச் சாலைகள், நகர்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்கட்டமைப்பு வசதிகளில் இடைவெளி நிரப்பும் பணிகள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், நீர் வள மேம்பாடு மற்றும் மீன்வளம் ஆகியவற்றிற்கு மிகுந்த முன்னுரிமை அளிக்கிறது.

இத்திட்டம், பரவலாக்கப்பட்ட ஆளுமையின் அடிப்படை அலகுகளான கிராம பஞ்சாயத்து, பேரூராட்சி அல்லது நகராட்சிகளில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களைப் போன்று வட்டம் மற்றும் வட்டாரங்கள் முழுவதையும் திட்ட செயல்பாட்டுக்கு எடுத்துக்கொண்டது போல் இல்லாமல் மலைப்பகுதிகளுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் அளிக்கும் நடைமுறை உறுதி செய்யப்படும்.

திட்ட இயக்குநரகமானது, இரண்டு அலகுகளைக் கொண்டு களச்செயலாக்கத்தினை மேற்கொண்டு திட்டம் செயல்படுவதை மேற்பார்வை செய்ய உருவாக்கப்பட்டுள்ளது. பிரிவு 1–ன்கீழ், தற்போதுள்ள மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநரின் பணி எல்லை மற்றும் செயல்பாடுகள் மேலும் விரிவுபடுத்தபட்டு கீழ்காணும் மாவட்டங்களும் சேர்த்துக் கொள்ளப்படும்:-

1. நீலகிரி
2 கோயம்புத்துார்
3 திருப்பூர்
4 ஈரோடு

பிரிவு 2–ன் கீழ் மாநிலத்திட்டக் குழுவில் தற்பொழுது உள்ள மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் மூலமாக எஞ்சிய மாவட்டங்களில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்பாடுகள் மேற்பார்வை செய்யப்படும். அவைகளாவன:-

1. திண்டுக்கல்
2 மதுரை
3 தேனி
4 விருதுநகர்
5 திருநெல்வேலி
6 கன்னியாகுமரி

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில் முன்னர் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் யாவும் அடிப்படையில் குறிப்பிட்ட துறையின் செயல்பாடுகளோடு சம்பந்தப்பட்ட துறை சார்ந்த திட்டங்களாக இருந்தன. தற்போதைய திட்டத்தின் கீழ், மிகவும் வலுவான திட்டங்களுக்கான பணி மற்றும் துறைகளை இனங்கண்டு செயல்படுத்துவதற்காக, திட்டச் செயல்பாட்டிற்கான பகுதிகள் மற்றும் துறைசார்ந்த நடைமுறைகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது, தற்பொழுது நடைமுறையில் உள்ள பிற திட்டங்களின் முழு பயன்களைப் பெறும் விதத்தில் அத்திட்டங்களோடு ஒருங்கிணைத்து செயல்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது நிதித் தேவை மற்றும் திட்டச் செயலாக்கத்தில் ஏற்படும் பற்றாக்குறைகளை சரிசெய்ய மட்டுமே பயன்படுத்தப்படும். எடுத்துக்காட்டாக, திட்ட ஒருங்கிணைப்பிற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கும் போது, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிதி மற்றும் திட்ட உதவிகள் ஒரு முழுமையான திட்டத்தினை உருவாக்க ஆதார நிதியாக பயன்படுத்தப்படும். திட்டங்களுக்கான உதவிகள் அனைத்தும் மாநிலத்தில் மலைப்பகுதிகளின் இலக்கான பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு மற்றும் நீடித்த மேம்பாட்டு கொள்கைக்கு ஒத்திசைவாக இருப்பதையும் உறுதி செய்யும்.

2015–2016ஆம் ஆண்டில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூபாய் 75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2016– 2017ஆம் ஆண்டில் ரூபாய் 75 கோடி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 2.12.2 மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக தொலைவில் உள்ள மலைப்பாங்கான பகுதிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்தல்

தமிழ் நாட்டின் மலைப்பாங்கான மாவட்டங்களில் மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக நலத்திட்டங்கள் செயல்படுத்த 2013–14 மற்றும் 2014–15 ஆம் ஆண்டுகளில் சிறப்பு நிதி ஒப்பளிக்கப்பட்டது. இந்நலத்திட்டங்கள் 2015–16 ஆம் ஆண்டு சிறப்புப் பகுதி

மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் தொலைவில் உள்ள மலைப் பகுதிகளின் முன்னேற்றம் குறித்தும் அவைகளை விரைந்து செயல்படுத்தப்படுவது குறித்தும் ஆய்வு செய்வதற்குத் தேவையான காலமுறைக் கூட்டங்கள் மாநில அரசால் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

## 2.13 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின், 29.04.2003 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்:31–இல் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஒருபகுதியாக இணைத்து துறையினை விரிவாக்க அரசு முடிவெடுத்தது. வெவ்வேறு துறைகளிலிருந்து உருவாகி அரசின் முன்னுரிமையைப் பெறும் புத்தாக்கத் திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்வது சிறப்பு முயற்சிகள் துறையின் நோக்கமாகும்.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின், 02.11.2006ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 146–இல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் "ஒருங்கியல் பட்டியலில்" சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு திட்டத்தினை ‘‘சிறப்பு முயற்சி’’ திட்டமாகக் கருதுவதற்கு ஆராய வேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்ட பின்னர் அதற்கான செயலாக்கங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அல்லது சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பாட்டினை முதிர்விற்குக் கொண்டு வருவதாகும். ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி முதிர்வு நிலை அடைந்துவிட்டது என்று முடிவெடுக்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி

மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்று கருதப்பட்டால், அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும். இந்த முறையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் **18.01.2007**ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் **10**–ல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் கீழ் "சிறப்பு முயற்சி" திட்டமாக அறிவிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

## 2.14 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

**2012–13** ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், வட்டாரங்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வுகளை களைவதற்குரிய முக்கிய சமூக காரணிகளான சுகாதாரம் மற்றும் கல்வி, மேலும் பிற சமூக, பொருளாதார காரணிகளான தனிநபர் வருமானம், வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை மற்றும் பாலினம் சார்ந்த வளர்ச்சி ஆகிய காரணிகளின் அடிப்படையில் **100** மிகவும் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பின்தங்கிய வார்டுகள் கண்டறியப்படும். அரசாணை நிலை எண்.**13**, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் **07.04.2013**–ல் ஆண்டிற்கு ரூபாய் **100** கோடி ஒதுக்கீட்டில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி நிறுவப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் இவ்வாறு கண்டறியப்பட்ட பகுதிகளில் ஏற்றத்தாழ்வுகளை களையும் பொருட்டு இலக்குகளை கொண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசாணை நிலை எண்.**68**, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் **26.08.2015**ல் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக

மாநிலத்தில் உள்ள **105** பின்தங்கிய வட்டாரங்களை பொருத்தமான அளவுகோலின் அடிப்படையில் தேர்வு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## 2.15 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பை நிறுவுதல் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஏற்படுத்துதல்

**08.08.2014** அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண்.**110**இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படியும் தமிழ்நாடு தொலை நோக்கு திட்டம் **2023** இன் முக்கியமான குறிக்கோளின் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டை புத்தாக்க மையமாக உருவாக்குவதற்கு “தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்” (Tamil Nadu Innovation Initiatives - TANII) என்ற ஓர் அமைப்பினை மாநில திட்டக்குழுவில் நிறுவுவதற்கு அரசு ஆணை (நிலை) எண்.**93**, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மா.தி) துறை, நாள் **26.09.2014**–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசுத்துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக ஏற்கனேவே உள்ள பகுதி II திட்டத்தை மாற்றியமைத்து **2015–2016** ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ரூ.**150** கோடி நிதி ஒதுக்கீட்டில் மாநில புத்தாக்க நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு பரிசுகள் வழங்குவதற்காக “மாண்புமிகு முதலமைச்சரின் புத்தாக்க விருது” என்ற பெயரில் விருது ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 3.0 துறைத் தலைவர்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகள்/நிறுவனங்கள் பின்வருமாறு:

i. மாநிலத் திட்டக் குழு

ii. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

iii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

iv. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், ஒரு கூட்டுத் துறை நிறுவனம்

மேற்கண்ட துறைகளின் பணிகள் சுருக்கமாக பின்வருமாறு:

### 3.1 .1 மாநிலத் திட்டக்குழு

மாநிலத் திட்டக்குழு, தமிழ்நாட்டில், 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் ஒரு ஆலோசனை அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, மாநிலத்தின் வளர்ச்சி குறித்த பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு இத்திட்டக்குழு அளித்து வருகிறது.

### 3.1.2 மாநிலத் திட்டக் குழுவின் முதன்மையான பொறுப்புகள்

i. ஐந்தாண்டுத் திட்டத்தில் அளிக்கப்பட வேண்டிய முன்னுரிமைகள் மற்றும் அத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனைகளை அரசிற்கு வழங்குதல்;

ii. வரைவு ஐந்தாண்டு திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டுதல் குழுக்கள் மற்றும் பணிக்குழுக்களை அமைத்தல் மற்றும் வரைவு ஐந்தாண்டு திட்டம் தயாரித்து ஒப்புதலுக்கு அனுப்புதல்;

iii. நிதி ஆதாரங்களுக்கேற்ப வரவு செலவுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது குறித்து அரசுக்குப் பரிந்துரைத்தல்;

iv. வரைவு ஆண்டுத் திட்டங்களை தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்புதல்;

v. ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்துவது குறித்தும் காலமுறை அடிப்படையில் ஆய்வு செய்தல்;

vi. ஐந்தாண்டுத் திட்டத்தை இடைக்கால ஆய்வு மேற்கொள்வதுடன், அவ்வாய்வின் அடிப்படையில் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களை திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசிற்கு ஆலோசனை அளித்தல்;

vii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உதவியுடன், பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல், அம்மதிப்பீட்டின் அடிப்படையில் திட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் செம்மைப்படுத்துதல் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல்;

viii. நடைமுறையில் உள்ள அரசாணைகள் மற்றும் வழிமுறைகளின்படி மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியை திறம்பட செயல்படுத்துதல்;

ix. மாவட்டத் திட்டக்குழுக்களின் பணிகளை ஒருங்கிணைத்து, திட்டமிடல் நடவடிக்கைகளை மாவட்டம்/வட்டாரம்/ கிராம அளவில் மேற்கொள்ளுதல்;

x. ஐந்தாண்டுத் திட்டம் / ஆண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கான துணைத் திட்டங்களை தயாரிப்பது குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குதல்;

xi. மாநில மனித மேம்பாட்டுக் குறியீடு, பாலின மேம்பாட்டுக் குறியீடு ஆகியவற்றில் மாற்றம் / பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சிக் காரணிகளை பல்வேறு நிலைகளில் கண்காணித்து அவற்றை சரிசெய்ய தேவையான வழிமுறைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறுதல்;

xii. திட்டங்கள் வகுத்திடவும், செயல்படுத்தவும் தேவையான சிறப்பு மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளுதல்;

xiii. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்து, தேவையான அறிக்கைகளை தேவைப்படும் பொழுது அரசுக்கு அளித்தல்;

xiv. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஆகியவற்றை நிர்வகிப்பது; மற்றும்

XV. தமிழ்நாடு நிலப் பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் மூலமாக தமிழ்நாடு வரைவு நிலப் பயன்பாட்டுக் கொள்கையை உருவாக்குதல்;

**2017–2018** ம் ஆண்டு முதல், திட்டம் மற்றும் திட்டம் சாராத செலவினங்களை ஒன்றிணைக்கக் கருதி உள்ளதால், மாநிலத் திட்டக் குழுவின் பணி மற்றும் செயல்பாட்டில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

## 3.1.3 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்

"தொலை நோக்குத் திட்டம் – தமிழ்நாடு **2023**" அறிக்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக இந்தியாவிலேயே புதுமையாக்கத்தின் இருப்பிடமாக தமிழ் நாட்டை உருவாக்க குறிக்கோள் கொண்டுள்ளது. அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" என்ற ஓர் அமைப்பு மாநிலத் திட்டக்குழுவில் நிறுவப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இந்த அமைப்பு அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை வளர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இது படிப்படியாக அரசுத் துறை அல்லாத நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்படும்.

## 3.1.4 மாநில புத்தாக்க நிதி

அரசு மாநில புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்கெனவே உள்ள பகுதி – II புதிய திட்டத்தை மாற்றியமைத்து புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியத்திற்கு **2015–16**ம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் ரூ.**150** கோடி வழங்கப்படுகிறது. அரசு ஆணை எண் **124,**

திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள் **24.10.2014–**ல் புத்தாக்க திட்டங்களை கண்டறிவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் தொடர்புடைய விரிவான வழி காட்டும் நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

**2015–16**ம் ஆண்டில் மொத்தம் **73** புதுமைத் திட்டங்கள் மற்றும் **3** திட்டங்கள், மதிப்பீடு மற்றும் திறன் மேம்பாட்டின் கீழும், இறுதி செலவாக ரூ.**183.04** கோடியில் மூன்றாண்டுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் முதல் ஆண்டான **2015–16** ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.**125.39** கோடியாகும்.

**2016–17** ஆம் ஆண்டில் புதுமை திட்டங்களுக்கான முதல் சுற்றில் மதிப்பீடு கூட்டங்கள் நடத்தப்பட்டு ரூ.**75.16** கோடிக்கு **42** திட்டங்கள் அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் **2016–17** ஆம் ஆண்டின் இரண்டாவது சுற்று மதிப்பீட்டிற்காக துறைகளிடமிருந்து புதுமைத் திட்டங்கள் வரவேற்கப்பட்டுள்ளன.

### 3.1.5 தொடர் திட்டங்களுக்கான மறு ஆய்வு

அரசு ஆணை எண்.**83**, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் **03.09.2014–**ல், குறிப்பிட்டுள்ளபடி வரவு செலவுத் திட்ட தயாரிப்பு மற்றும் ஆண்டுத் திட்டம் **2015–16** தயாரிப்பின் ஒரு பகுதியாக குறிப்பிட்ட **14** துறைகளின் தொடரும் திட்டங்களுக்கான மறு ஆய்வு மாநிலத் திட்டக்குழுவால் மேற்கொள்ளப்பட்டது. இந்த மறு ஆய்வு, செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் அரசின் கொள்கை முடிவுகளை சார்ந்து செயல்படுகின்றனவா அந்த திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கீடு சரியான அளவில் அளிக்கப்படுகின்றனவா மற்றும் அத்திட்டங்கள்

சார்ந்த துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்கின்றதா மற்றும் மாநில முழுமைக்குமான சமூக பொருளாதார முன்னுரிமைகளை அடைய உதவி புரிகின்றனவா என்பதனை அறிந்து கொள்வதற்காக நடத்தப்பட்டன. மேலும், தொடர் திட்டங்களை ஆய்வு செய்து திட்டத்தை தற்போதுள்ள வடிவமைப்பு மற்றும் ஒதுக்கீட்டின் அளவுடன் தொடர்வதற்கான தேவை அல்லது திட்ட ஒதுக்கீட்டை குறைப்பது மற்றும் திட்டத்தின் அமைப்பினை மாற்றுவது அல்லது திட்டத்தினை முழுவதுமாக நிறுத்துவது அல்லது திட்டத்தினை திட்டம் சாராதத் திட்டமாக மாற்றுவது குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டன. இந்த மறு ஆய்வின் மூலமாக குறைவான செயல்பாடு கொண்ட திட்டங்கள் கண்டறியப்பட்டு அத்திட்டங்களை திருத்தி அமைப்பதற்கும் தேவைக்கேற்றவாறு நிதி ஒதுக்கீடு செய்யவும் பரிந்துரை செய்யப்பட்டது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள பிரச்சனைகள் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டு ஆண்டுத் திட்டம் சிறந்த முறையில் தயாரிப்பதற்கு தீர்வு காணப்பட்டது. மேலும் மாநில அரசு, மைய அரசு மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருந்தது.

### 3.1.6 தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்

தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழுவானது தமிழ்நாடு வரைவு நிலப் பயன்பாட்டு கொள்கை உருவாக்கத்தில் ஈடுபட்டுள்ளது. தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின் கீழ் தொடர் ஆராய்ச்சி ஆய்வுகள் 2013 - 2014 மற்றும் 2014–2015 ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்

பட்டுள்ளன. மேலே உள்ள ஆராய்ச்சி ஆய்வுகள் நிலப்பயன்பாடு மற்றும் நிலபோர்வை குறித்த மாற்றம், நகரமயமாதல், தொழில்மயமாதல், சமூக பொருளாதார நிலை குறித்து ஏற்கனவே உள்ள சட்டங்களின் கட்டமைப்பு மற்றும் நிலப்பயன்பாட்டு கொள்கைகளின் காரணமாக நிலப் போர்வை மாற்றங்கள் மற்றும் தாக்கங்களின் மதிப்பீடு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 2015 – 2016 ஆம் ஆண்டில் எட்டு ஆராய்ச்சி ஆய்வுகள் மற்றும் ஆறு தொழிற்பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2016 – 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின் கீழ் புதிய ஆராய்ச்சி ஆய்வுகள் குறித்த முன்மொழிவுகள், சம்பந்தப்பட்டத்துறை / பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்களிடமிருந்து வரவேற்கப்பட்டுள்ளன. 2016 – 2017 ஆம் ஆண்டிற்கான புதிய ஆய்வுகள் குறித்து முடிவுகள் இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

அரசாணை எண்.40, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்துறை, நாள் 04.03.2016ல், சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டத்திற்காக (SADP), ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மலைப்பகுதிகளுக்கான, மாநில அளவிலான தொழில்நுட்ப நிறுவனம் (STCHA) தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின் கீழ் செயல்பட உள்ளது. சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டமானது உத்தேசிக்கப்பட்டுள்ள தாங்கல் மண்டலம் (Buffer zone) பக்கத்தில், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி மற்றும் விரிவாக்கப்பட்ட வாழ்வாதார வாய்ப்புகள், தற்பொழுது உள்ள அல்லது நுண்ணிய நீர்ப்பிடிப்பு அடிப்படையில் திட்டமிடுதல் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது.

### 3.1.7 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

மாநிலத்தில் சமச்சீர் வளர்ச்சியடைய, அரசு உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்காக கொண்டுள்ளது. இதற்காக இவ்வரசு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியை **2012–2013**இல் அறிமுகப்படுத்தியது. நிதி சமூக பொருளாதார வளர்ச்சி குறியீடுகளின் அடிப்படையில் மண்டலங்களில் காணப்படும் வேறுபாட்டினை குறைக்க இந்நிதி அறிமுகப்படுத்தப்பட்டது. தனிநபர், தலாவருமானம், வேலைவாய்ப்பின்மை, வறுமை, சுகாதாரம், கல்வி மற்றும் பாலின வேறுபாடுகள் போன்ற சமூக பொருளாதார குறியீட்டு காரணிகளை இந்நிதி அடிப்படையாகக் கொண்டது. ஊரக பகுதிகளில் உள்ள வட்டாரத்தினை அடிப்படை அலகாகவும் மற்றும் நகரபகுதிகளில் வார்டுகளை அடிப்படை அலகாகக் கொண்டுள்ளது. மேற்கண்ட அளவிடக்கூடிய குறியீட்டு காரணிகளை கொண்டு அடிப்படை அலகுகளான வட்டாரம், வார்டுகள் ஒப்பிட்டு பின்தங்கிய நிலை அளவிடப்படுகிறது. நகரப்பகுதிகளில், நகராட்சி, மாநகராட்சி வார்டுகளில் அதிக அளவில் குடிசை பகுதிகள் அமைந்துள்ள வார்டுகளை (Slum population) பின்தங்கிய பகுதிகளாக கருதி இப்பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நகர பஞ்சாயத்துகளிலும் பின்தங்கிய வட்டாரப் பகுதிகளுக்கு உட்பட்டு, மேலும் குறைந்த அளவு மக்கள் தொகை நெருக்கமுள்ள பகுதிகளாக இருப்பின் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும்

இத்திட்டத்தை, மாநிலத் திட்டக்குழு மாவட்டந்தோறும் உள்ள மாவட்ட திட்ட குழுக்கள் மூலம் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. மாநிலத் திட்டக் குழுவின் முக்கிய செயல் தலைவராக, மாவட்ட ஆட்சித் தலைவர் விளங்குகிறார். மாநில அளவிலான அதிகார குழுவின் வழிகாட்டலின்படி,

தொலைநோக்குத் திட்டங்களுக்கு ஒப்புதலும் நிதி ஒதுக்கீடும் இந்நிதியை கொண்டு செய்து வருகிறது. சமச்சீர் வளர்ச்சி நிதிக்காக, ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டிலுள்ள 385 வட்டராங்களில், 105 வட்டாரங்கள் பின்தங்கிய வட்டாரங்களாக கண்டெடுக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய நிலையை, கண்டறிய கலந்தாய்வின் மூலமும், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதிக்கான குறியீட்டு காரணங்களை கொண்டு பின்தங்கிய நிலையை கண்டெடுத்து சிறப்பு ஆய்வும் செய்து வருகிறது. இதற்கு மாவட்ட ஆதார நிறுவனங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவி வருவதுடன், மற்ற மாவட்ட அளவிலான, பல அரசு துறைகளும், தொலைநோக்கு திட்டம் தயாரிக்கவும் மற்றும் தனித்திட்டம் தயாரிக்கவும் உதவுகின்றன. தற்பொழுது 72 வட்டாரம் மற்றும் 3 நகரப் பகுதிகளுக்கு தொலைநோக்குத் திட்டம் (Perspective Plan) தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், பின்தங்கிய காரணிகள் நேரடியாக தவிர்க்கும் பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய காரணிகளான வறுமை, வாழ்வாதாரம், கல்வி, சத்துணவு, சேவை வழங்குவதில் முன்னேற்றம், அடிப்படை வசதிகள், வாழ்வாதார வாய்ப்புகள், சாலை இணைப்பு, போக்குவரத்து வசதி போன்றவை, பலவித முன்னேற்றங்களையும் அடைய வழிவகுக்கும். வறுமை ஒழிப்பு, வாழ்வாதார மேம்பாடு, கல்வி மேம்பாடு, சிறந்த சுகாதார வசதி திட்டங்களை பற்றிய விழிப்புணர்வு, மனித திறன் மேம்பாடு போன்றவற்றிற்கான முன்னேற்றத்திற்கு மாநில சமச்சீர் நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டங்கள் யாவும் மாநில அதிகாரக்குழுவால் கண்காணிக்கப்பட்டு, மற்றும் நிதி ஒதுக்கீடு ஏற்பு செய்யப்பட்டு வருகிறது. இந்நிதியின் செயல்பாடு மாநில அளவிலான கண்காணிப்புக்குழு, உறுப்பினர் – செயலர், உள்ளிட்ட மாநில கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் இதர மாநிலத் திட்டக் குழு அலுவலர்கள் மற்றும் மாவட்ட திட்டக்குழு அலுவலர்களால் கண்காணிக்கப்படுகிறது.

இந்நிதியின் கீழ் இதுவரை 452 திட்டங்கள் ரூபாய் 274.25 கோடிக்கு பின்தங்கிய வட்டாரங்களான கிராம பகுதிக்கும் நகர வார்டுகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வருகிற 2016–2017 நிதி ஆண்டிற்கு ரூபாய் 100 கோடி என்ற அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.1.8 மனித மேம்பாட்டு அறிக்கை

மாநிலத் திட்டக்குழு 32 மாவட்டங்கள் மற்றும் மாநிலத்திற்கான மனித மேம்பாட்டு அறிக்கையை மனித மேம்பாட்டிலுள்ள ஏற்றத்தாழ்வுகளில் இடைவெளியை நீக்கும் திட்டத்தின் கீழ் தயாரித்து வருகிறது. மனித மேம்பாட்டுக் குறிப்பீடுகள் மாவட்டங்களுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை வெளிக்கொணரும் மாவட்ட மனித மேம்பாட்டு அறிக்கைகள், மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை ஆராயும். மனித மேம்பாட்டு அளவுகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கும், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதிக்கான தொலைநோக்குத் திட்டம் தயாரிப்பதற்கு தேவையான உள்ளீடுகளை அளிப்பதற்கும் இவ்வறிக்கை பயனுள்ளதாய் அமையும்.

### 3.1.9 மாநில மதிப்பீடு மற்றும் ஆய்வுக்குழு

அரசு ஆணை எண்.78, திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள் **03.09.2014**ல் மாநில மதிப்பீடு ஆலோசனைக் குழு கூடுதல் பணிகளுடன் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவர், அதன் தலைவராவார். அக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடும். இக்குழுவின் பணிகள்:-

i. மாநில மதிப்பீடு குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடு ஆய்வுகளுக்கான செயல் முறைகளுக்கு ஒப்புதல் அளிப்பதும்;

ii. இடைநிலை மதிப்பீடு அறிக்கைகளையும், வரைவு அறிக்கைகளையும் இறுதி செய்வதும்;

iii. மதிப்பீடு ஆய்வுகளின் பரிந்துரைகளுக்கான மேல் நடவடிக்கைகளைப் பற்றி விவாதிப்பதும் ஆகும்.

## 3.2 பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

**“ எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு”**

உலகப் பொது மறையாம் திருக்குறளினை வகுத்துக் கொடுத்த தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவர்கள் எண்களின் (அதாவது புள்ளி விவரங்களின்) புள்ளி இயலின் முக்கியத்துவத்தை இக்குறளில் இயம்பியுள்ளார். அதனடிப்படையில் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை தமிழகத்திற்கான புள்ளி விவரங்களை வேளாண்மைத் துறை, தொழில் துறை, வீட்டு வசதி மற்றும் கட்டிடப் புள்ளி விவரங்கள், சந்தை மற்றும் விலைப் புள்ளி விவரம், மாநில

வருவாய் மதிப்பீடு மற்றும் சமூக பொருளாதார ஆய்வுகள் உட்பட பல்வேறு திட்டங்கள் வாயிலாக புள்ளி விவரம் சேகரித்து, தொகுத்து, பகுப்பாய்வு செய்து அரசுக்கு புள்ளி விவரங்கள் வழங்குவதில் மாநில முகமை மையமாக செயல்படுகிறது. தமிழக அரசும் இந்திய அரசும் கொள்கை முடிவெடுக்கவும் நலத்திட்டங்களை செயல்படுத்தவும் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை சமூக பொருளாதார காரணிகளை உரிய நேரத்தில் தேவையான, நம்பகமான முறையில் அளித்து வருகிறது.

### 3.2.1 துறையின் செயல்பாடுகள்

பல்வேறு பொருளாதார அளவீடுகளான மாநில வருவாய், மாவட்ட வருவாய், தொழில் உற்பத்தி குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண், மொத்த விலை குறியீட்டெண் போன்ற மதிப்பீடுகள் இத்துறையின் மூலம் கணிக்கப்பட்டு தொடர்ந்து வெளியிடப்பட்டு வருவதோடு மத்திய மாநில அரசுகளால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் சிறப்பு கணக்கெடுப்புகள், ஆய்வுகள் போன்றவற்றை மேற்கொண்டு பல்வேறு அறிக்கைகள் தயாரித்து அரசின் தேவைக்கேற்ப வழங்குவது இத்துறையின் முக்கிய செயல்பாடாகும். மேலும், இத்துறையால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு, பருவம் மற்றும் பயிர் பற்றிய அறிக்கை, பொருளாதார நிலை குறித்த ஆய்வறிக்கை போன்றவை பல்வேறு துறைகளுக்கும் உடனடி பார்வைக் கையேடுகளாக பயன்படுகின்றன. இவை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் பரவலாக பயன்படுகின்றன. தமிழகத்தின் பல்வேறு துறை சம்பந்தப்பட்ட திட்ட செயல்பாடுகளை இத்துறையின் தொழில்நுட்ப

பணியாளர்கள் மதிப்பீடு செய்து பல்வேறு ஆய்வறிக்கைகள் மூலம் அரசின் சமூக பொருளாதார திட்டங்கள் சிறப்பாக செயல்பட பணியாற்றி வருகின்றனர்.

பன்னாட்டு அளவில் பல்வேறு நாடுகள் மக்களுக்கு சிறந்த சேவை வழங்குவதற்காக ஆதார ரீதியிலான கொள்கை முடிவுகளின் அடிப்படையில் சிறந்த மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ள தொடங்கியுள்ளது. இந்த சிறப்பு செயலாக்கத்தினை நமது மாநிலத்திலும் செயல்படுத்தும் விதமாக இத்துறையில் சில புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.2.2 துறையின் புதிய முயற்சிகள்

**1. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையின் 'புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம்' அமைத்தல்**

இத்துறை இதற்கு முன்னர் புள்ளி விவரங்களை சேகரித்து அரசுக்கும் பல்வேறு துறைகளுக்கும் வழங்கும் பணியை மேற்கொண்டு வந்தது. தற்போது, இத்துறை உலக சூழலுக்கேற்ப புள்ளி விவரங்கள் வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவ்விவரங்களை சிறப்பாக ஆய்வு செய்து பல்வேறு சிறப்பு அறிக்கைகள் வெளியிடும் துறையாக மாறத் தொடங்கியுள்ளது.

பல்வேறு அரசுத் துறைகள் செயல்படும் போது எழும் எண்ணிலடங்கா விவரங்களை ஆராய்ந்து, பயனுள்ள அறிக்கைகளாக அரிதாக வகைப்படுத்தப்படுகிறது. 2015–16ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் பொருளியல் மற்றும்

புள்ளி இயல் துறையில் தமிழ்நாடு மின் ஆளுமை குழுவுடன் இணைந்து ‘‘புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம்’’ ஏற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இம்மையம் உயர்மட்டக் கொள்கைகள் முடிவெடுப்பதற்கு வேண்டிய அடிப்படை விவரங்களை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது. இந்தியாவில் இதுபோன்ற மையத்தினை உருவாக்கும் முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

இப்புதிய பகுப்பாய்வு மையமானது, நவீன தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பல்வேறு துறை திட்டங்களின் தேவையான புள்ளி விவரங்களை அளித்து கொள்கை முடிவுகளை விரைவாக எடுக்க உதவுவது இதன் நோக்கமாகும். இதற்காக ‘‘செயல்படும் பிரிவு’’ ஒன்றும் துறையில் உருவாக்கப்பட்டு பல்வேறு துறைகளின் விவரங்களை விரைவாக தொகுத்து பிற துறைகளுக்குத் துல்லியமாக தேவையின் அடிப்படையில் வழங்கும்.

இரு கட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ள இத்திட்டத்தில் புள்ளிஇயல் தொழில் உத்தியைப் பயன்படுத்தி தீர்க்கமான மற்றும் விரிவான பகுப்பாய்வு உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மாதிரி ஆய்வுக்காக, மிக அதிக புள்ளி விவரங்களை கொண்டுள்ள பள்ளி கல்வித்துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை ஆகிய துறைகள் முதற்கட்டமாக தங்களது புள்ளி விவரங்களை பகிர்ந்து கொள்ள முன்வந்துள்ளன.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் – மாநில புத்தாக்க நிதி **2015–16**ன் கீழ், இத்திட்டத்திற்கான மொத்த செலவின நிதியாக ரூ.**428.66** இலட்சம் (முதலாண்டு ரூ.**63.00** லட்சம் இரண்டாம் ஆண்டு ரூ.**365.66** இலட்சம்) வழங்கிட ஒப்புதல் வழங்கப்பட்டு அரசாணை எண்.**20**, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள்.**26.02.2016**–ன்படி **2015–16**ஆம் ஆண்டிற்கான முதற்கட்டமாக ரூ.**63.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. தமிழ்நாடு குடும்ப நிலை குறித்த குழு ஆய்வு நடத்துதல்**

தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்வது இந்த ஆய்வின் நோக்கமாகும். சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த விவரங்களைத் திட்டமிடுபவர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் உரிய நேரத்தில் புள்ளி விவரங்கள் வழங்குவது இந்த ஆய்வின் நோக்கமாகும். தமிழ்நாடு குடும்ப நிலை குழு ஆய்வானது தொடக்க நிலை, இறுதி நிலை என இரு கட்டங்களாக மூன்று ஆண்டுகள் நடத்தப்பட உள்ளது. இந்த ஆய்வு சென்னை மேம்பாட்டு ஆய்வு நிறுவனம் (Madras Institute of Development Studies) மற்றும் மிச்சிகன் பல்கலைக் கழக ஆராய்ச்சி ஆய்வு மையத்தின் மாதிரி ஆய்வு நிறுவனம் (Survey Research Center of Michigan University) ஆகியோருடன் இணைந்து செயல்படுத்தப்படும்.

இதற்கான புரிந்துணர்வு வரைவு ஒப்பந்தம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்திற்கான மாதிரி வடிவமானது (Sample Design) சுகாதாரம், வருமானம், நுகர்வு, இடப் பெயர்ச்சி, வேலை வாய்ப்பு, பொருளாதார உடைமைகள் மற்றும் மக்களாய்வு ஆகிய காரணிகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் – மாநில புத்தாக்க நிதி 2015–16ன்படி இத்திட்டத்தின் மொத்த செலவின தொகையாக ரூ.390.00 இலட்சம் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### 3. தமிழக – வயது முதிர்ந்தோரின் சமூக – பொருளாதார நிலை குறித்த ஆய்வு

மூத்த குடிமக்களின் உடல்நிலை, மனநிலை, நிதி மற்றும் வாழ்வு சூழ்நிலை அறிந்து “தரவு தளம்” (Data base) தயாரித்து அவர்களின் வாழ்வு நிலையை மேம்படுத்துவது இந்த தொடர்குழு ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்வு அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு, தெற்கு ஆசியா மற்றும் இத்துறையுடன் இணைந்து மூன்றாண்டுகளுக்கு நடத்தப்படும் தொடர் ஆய்வாகும். அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு, தெற்கு ஆசியா நிறுவனம் தொழில் நுட்பத்திற்கும் மற்றும் தரக்கட்டுப்பாட்டிற்கும் ஆலோசனை வழங்கும் மையமாக செயல்படும். மேலும், வயது

முதிர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த, தேவைப்படும் மிக முக்கிய நுணுக்கமான தீர்வுகள் அடைய இந்த ஆய்வின் முடிவுகள் தனித்துவத்துடன் உதவும்.

இந்த தொடர்குழு ஆய்வினை மூன்று ஆண்டுகளுக்கு நடத்த திட்ட செலவினமாக ரூ.**606.00** இலட்சம் (ரூ.**90.00** இலட்சம் + ரூ.**254.01** இலட்சம் + ரூ.**261.99** இலட்சம்) அரசு புத்தாக்க நிதி – தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து **2015–16**ஆம் ஆண்டிற்கு அரசாணை (நிலை) எண். **21**, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ(ம) **2**,இ) துறை நாள்.**27.02.2016** மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.3 வேளாண்மை புள்ளி விவரங்கள் சேகரித்தல்

வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் பணிபுரியும் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத் தரத்தினை நிர்ணயிக்கும் வேளாண்மை தொழில்களின் பங்கு மாநில பொருளாதாரத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்துறையின் வேளாண்மை புள்ளி விவரம் பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி, நிலப் பயன்பாடு, நீர்ப்பாசனம், நில உடைமை, பயிர் காப்பீடு, விவசாயக்கூலி, விவசாயிகளின் விற்பனை மிகுதி போன்ற அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியது. இவ்விவரங்கள் விவசாயம் சார்ந்த திட்டங்களின் கொள்கை முடிவுகள் மேற்கொள்ள பயன்படுகிறது. இத்துறையில் பின்வரும் பல்வேறு விவசாயம் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- நம்பகத்தன்மையான உற்பத்தி மதிப்பீடுகளையும், ஒரு ஹெக்டேருக்கான விளைச்சல் விகிதத்தினையும் கணக்கிடுவதற்காக பயிர் அறுவடை பரிசோதனை திட்டத்தின் கீழ் பழங்கள், காய்கறிகள் மற்றும் குறும் பயிர்கள் ஆகியவற்றில் பயிர் அறுவடை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டத்தில் மா, பலா, வாழை, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, அன்னாசி மற்றும் எலுமிச்சை ஆகிய பழவகைப் பயிர்களுக்கும், தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோசு, சர்க்கரைவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களுக்குமான விளைச்சல் விவரங்கள் கணிக்கப்படுகிறது. இதற்காக **2015–16**–ஆம் ஆண்டில் **682** கிராமங்களில் **1364** பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறும் பயிர் திட்டத்தில் **2015–16**–ஆம் ஆண்டில் மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக்கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக் கிழங்கு, முந்திரி, இஞ்சி ஆகிய பயிர்களில் **613** கிராமங்களில் **1226** பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- ஒவ்வோர் ஆண்டும், ஜமாபந்தி மற்றும் பயிர் அறுவடை ஆய்வின் இறுதி முடிவுகளின் அடிப்படையில் பயிர் விளைச்சல் விவரங்களை ஆய்வதற்கு முன்னதாக பயிர் பரப்பு மற்றும் பயிர் உற்பத்தி விவரங்களை பருவ வாரியாக தெரிந்து கொள்வதற்காக முதன்மையான **56** உணவு மற்றும் உணவல்லாத பயிர்களின் பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி முன்மதிப்பீடு செய்யப்படுகின்றது.

- பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தின் கீழ் **9276** பயிர் அறுவடை பரிசோதனைகள் **2015–16**ஆம் ஆண்டு (பசலி ஆண்டு **1425**) நடத்தப்பட்டு **16** முக்கிய பயிர்களுக்கு விளைச்சல், உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் ஆகியவை மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன.

- மாநில மற்றும் மாவட்ட வாரியாக தென்னை மற்றும் கமுகு தோப்புகளின் எண்ணிக்கை / ஹெக்டேருக்கு சராசரியாக காய்க்கும் மற்றும் காய்க்காத மரங்களின் எண்ணிக்கை / ஆண்டுக்கு தோப்புகளின் சராசரி உற்பத்தி வீதம் ஒரு ஆண்டின் மொத்த உற்பத்தி மாநிலத்திற்கும் மாவட்டத்திற்கும் தென்னை மற்றும் கமுகு ஆய்வு திட்டத்தின் கீழ் கணக்கிடப்படுகின்றன.

- **2015–16** ஆம் ஆண்டில் (பசலி ஆண்டு **1425**), இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும்பொருட்டு, **20** பயிர்களின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட வட்டாரம் / குறுவட்டம் வாரியாக காரிப் பருவத்தில் **64,120** பயிர் அறுவடை பரிசோதனைகளும், ராபி பருவத்தில் **54,906** பயிர் அறுவடை பரிசோதனைகளும் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன.

- **2016–17** ஆம் ஆண்டிற்கு “**பிரதம மந்திரி பசல் பீமா யோஜனா**” என்ற புதிய பயிர் ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் காரிப் பருவம் முதல் கிராம அல்லது குறுவட்ட அளவில் பயிர் அறுவடை பரிசோதனை

மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் கிராமங்களில் உள்ள குறிப்பிட்ட பயிர்களின் சராசரி விளைச்சல் பயிர் அறுவடை சோதனைகளின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

- மழைப்புள்ளி விவரத் திட்டத்தின்படி பல்வேறு துறையின் **628** நிலையங்களிலிருந்து சாதாரண மழைமானி மூலம் மழை விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாதம், பருவம், ஆண்டு வாரியாக தொகுக்கப்படுகின்றது.
- நீர்ப் பாசன புள்ளி இயல் திட்டத்தின் கீழ் ஆதார வாரியாக, பயிர் பரப்பு வாரியாக மற்றும் நீர் பிடிப்புப் பகுதி வாரியாக புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வட்ட வாரியாக மாவட்ட நீர்ப்பாசன புள்ளி இயல் கையேடு வெளியிடப்படுகின்றது. பொருளாதார நிலைத் தன்மையை தீர்மானிப்பதில் பெரு மற்றும் நடுத்தர பாசன திட்டங்களின் பயன்களை செலவு – பயன் அடிப்படையில் மதிப்பீடு செய்ய இவ்விவரங்கள் பயன்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட நீர்பாசன விவரங்கள் தொகுக்கப்படுகிறது.
- மாநிலத்தில் உள்ள **385** வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம் **385** கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, வயலில் வேலை செய்யும் தொழிலாளர் மற்றும் இதர விவசாய தொழிலாளர்கள் என இரு பிரிவாக சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மாநில அளவிலான சராசரி தினக்கூலி விகிதம் மற்றும் விவசாயக் கூலி குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது.

- விற்பனை மிகுதி திட்டத்தின் நோக்கமானது, பயிரிடுபவரின் சொந்த உபயோகம், கூலி வகை மற்றும் விதை ஒதுக்கீட்டிற்கு பின் விற்பனைக்கு கிடைக்கக் கூடிய நெல் குறித்து அளவிடுவதாகும்.

### 3.2.4 மத்திய நிதி உதவி திட்டங்கள்

- பயிர் பரப்பு உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோகப் புள்ளி விவரங்கள் கணக்கெடுக்கப்படுகிறது. காரிப், ராபி, கோடை ஆகிய மூன்று பருவத்திலும் உயர் ரகம், உள்ளூர் ரகம் பயிர் வாரியாக நீர்பாய்ச்சசப்பட்ட மற்றும் நீர்பாய்ச்சப்படாத பரப்பு மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. 2015–16 ஆம் ஆண்டு, 3484 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு பருவ வாரியாக பயிர் பரப்பு மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு விவரங்கள் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- மாநிலத்தில் பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலர்களால் பயிர் பரப்பு கணிக்கப்பட்ட பின்னர் மத்திய, மாநில அரசு அலுவலர்களால் பயிர் பரப்பாய்வு செய்தலும், அடங்கலில் கிராமத்திற்கான பயிர் பரப்பின் கூட்டுத்தொகை சரியான முறையில் கணிக்கப்படுகிறதா என்பதை மேற்பார்வையிடு வதுடன், முக்கிய உணவுப் பயிர்களுக்கு விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்கவும், அறுவடை நிலையில் பயிர் அறுவடை பரிசோதனைகளை

மேற்கொள்ளுதலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

- வேளாண்மைக் கணக்கெடுப்பு இத்துறையால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை 1970–71 முதல் நடத்தப்படுகிறது. 2010–11 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு ஒன்பதாவது கணக்கெடுப்பாகும். 9–வது வேளாண்மைக் கணக்கெடுப்பின் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பு ஜுலை 2015 – ஜுன் 2016 யினை அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஜுலை 2016 முதல் நடைபெற்று வருகிறது. இக்கணக்கெடுப்பு வருவாய்த் துறையால் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் அடிப்படையில் விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. மூன்று கட்டங்களில் இக்கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இக்கணக்கெடுப்பு கைப்பற்றுதாரர்களை முக்கிய அலகாகக் கொண்டு நடத்தப்படும் கணக்கெடுப்பாகும். நிலப் பதிவேடுகளிலிருந்து நில சாகுபடியாளர்களின் நில கைப்பற்று, நிலகுத்தகை, நிலப் பயன்பாடு, நீர்ப்பாசன ஆதாரம், பயிர் சாகுபடி முறை, சமூக நிலை, கால்நடைகள், வேளாண் உபகரணங்கள், கருவிகளின் பயன்பாடு, பூச்சிக் கொல்லி, இயற்கை உரப் பயன்பாடு போன்ற பல புள்ளி விவரங்கள் இக்கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்படுகின்றன.

### 3.2.5 மாநில வருவாய் புள்ளி விவரங்கள்

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை அளவிடுவதற்கு மாநில வருவாய் கணக்கீடு மிகவும் இன்றியமையாததாகும். மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார பெருமொத்த காரணிகள் நாட்டின் மாநிலங்களுக்கிடையேயான நிலையினை ஒப்பிட்டு ஆய்விட அவசியமான ஒன்றாக விளங்குகின்றன. மேலும் அரசுக்கு பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் ஏற்படும் மாற்றங்களை கணிக்கவும் அரசு நிதி நிலை தேவைகளை கணிக்கவும் இவை பயன்படுகின்றன.

**1. மாநில வருவாய்**

மாநில வருவாய் பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட்பிரிவுகளின் கீழ் மொத்த, நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை மாநில அளவிலும், மாவட்ட வருவாய் மதிப்பீடுகளும் ஒவ்வொரு வருடமும் கணிக்கப்படுகின்றன. மாநில வருவாய் மதிப்பீடுகள் **2011–12**ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாட்டிற்கு **2011–12, 2012–13, 2013–14,** ஆம் ஆண்டுகளுக்கு திருத்திய மதிப்பீடும், **2014–15**ஆம் ஆண்டிற்கு துரித மதிப்பீடும், **2015–16**ஆம் ஆண்டிற்கு முன் மதிப்பீடும் நடப்பு மற்றும் நிலையான விலையில் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

## மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு – தமிழ்நாடு

## (அடிப்படை ஆண்டு 2011–12)

(ரூபாய் கோடியில்)


| வ. எண். | ஆண்டு | மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி | | நிகர மாநில உள்நாட்டு மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | நடப்பு விலையில் | நிலையான (2011–12) விலையில் | நடப்பு விலையில் | நிலையான (2011–12) விலையில் |
| 1 | 2011–12 | 751485 | 751485 | 674478 | 674478 |
| 2 | 2012–13 | 855481 | 787907 | 768951 | 705426 |
| 3 | 2013–14 (தி.ம.) | 971090 | 842182 | 861429 | 740623 |
| 4 | 2014–15 (து.ம) | 1092564 | 900628 | 970953 | 790760 |
| 5 | 2015–16 (மு.ம.) | 1212668 | 979816 | 1080461 | 863423 |

தி.ம. – திருந்திய மதிப்பீடு, து.ம – துரித மதிப்பீடு, மு.ம.– முன் மதிப்பீடு

## தமிழ் நாட்டின் தனிநபர் வருமானம்
## (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி)

(ரூபாயில்)

| வ. எண். | ஆண்டு | நடப்பு விலையில் | நிலையான (2011–12) விலையில் |
|---|---|---|---|
| 1 | 2011–12 | 92984 | 92984 |
| 2 | 2012–13 | 105032 | 96355 |
| 3 | 2013–14 (தி.ம) | 116583 | 100233 |
| 4 | 2014–15 (து.ம) | 130197 | 106034 |
| 5 | 2015–16 (மு.ம) | 143547 | 114712 |
| தி.ம. – திருந்திய மதிப்பீடு, து.ம – துரித மதிப்பீடு, மு.ம.– முன் மதிப்பீடு | | | |



மாவட்ட வருவாய் மதிப்பீடுகள் (அடிப்படை ஆண்டு: **2004–05)** **2004–05**ஆம் ஆண்டு முதல் **2011–12**ஆம் ஆண்டு வரையில் நடப்பு மற்றும் நிலையான விலையில் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

## 2. மாநிலக் கணக்கு

தமிழ்நாடு மாநில நிதிநிலை அறிக்கை 2013-14(A/C), 2014-15 (R.E), 2015-16(B.E) ஆண்டுகளுக்கு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் வரவு–செலவு கணக்கு விவரங்களும் சேகரிக்கப்பட்டு மாநில வருவாய் மதிப்பீடு கணிக்க பயன்படுத்தப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் மூலதன ஆக்கம் ஆகியவை கணிக்க மண்டல மற்றும் உள்நாட்டு ஆட்சியகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## 3. மூலதன ஆக்கம்

மாநிலத்தின் ஒவ்வொரு பொதுத் துறை மற்றும் தனியார் துறையின் மொத்த நிலையான மூலதனம் கணிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிற்கான மொத்த நிலையான மூலதன ஆக்க மதிப்பீடுகள் **2004–05** முதல் **2010–11** ஆகிய வருடங்களுக்கு கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. **2011–12** முதல் **2014–15** ஆகிய வருடங்களுக்கு மொத்த நிலையான மூலதன ஆக்க மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு வருகின்றன. மூலதன கணிப்பு வருங்கால வளர்ச்சி சார்ந்த மாநில பொருளாதாரத்தை பற்றி அறிந்து கொள்ளவும் பொதுத் துறை மற்றும் தனியார் துறையின் பங்கினை தெரிந்து கொள்ளவும் உதவுகிறது.

## 3.2.6 விலைவாசி மற்றும் விலைவாசி குறியீட்டெண்

### 1. அங்காடி புலனாய்வு மற்றும் விலைப் புள்ளி விவரம்

மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள் மூலம் முக்கிய வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்பற்ற பொருட்களின் விலைகள், முதன்மை வேளாண்மை பொருட்களின் வரத்து, இருப்பு மற்றும் அனுப்புகை போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் வாரந்தோறும் / மாதந்தோறும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. மொத்த விலைகள் மற்றும் நுகர்வோர் விலை குறியீட்டெண் கணக்கிடுவதற்கு விலை விவர குறிப்பு ஒரு முக்கிய உள்ளீடாகும்.

### 2. மொத்த விலை குறியீட்டெண்

வேளாண்மை மற்றும் இதர பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் சேகரித்து ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டிற்கான மொத்த விலை குறியீட்டெண் கணிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

### 3. தொழிலாளர் நுகர்வோர் விலைக் குறியீட்டெண்

தொழிலாளர் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் திட்டம் மத்திய மற்றும் மாநில தொடருக்கு தனித்தனியாக கணக்கிடப்படுகிறது. மத்திய அரசினை பொறுத்த வரையில் தொழிலாளர் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்க தமிழகத்திலிருந்து ஆறு மையங்களில் (சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி மற்றும்

குன்னூர்) விலைவாசிப் புள்ளிகள் சேகரிக்கப்பட்டு சிம்லாவில் உள்ள மத்திய தொழிலாளர் அமைப்பகத்திற்கு அளிக்கப்பட்டு மத்திய அரசின் மூலம் குறியீட்டெண்கள் வெளியிடப்படுகிறது. மாநில அரசினை பொறுத்தவரை கடலூர், நாகர்கோவில், தூத்துக்குடி மற்றும் வேலூர் ஆகிய மையங்களுக்கு பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை மூலமாகவே மாதந்தோறும் தொழிலாளர் நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் கணிக்கப்பட்டு வெளியிடப் படுகின்றன.

### 3.2.7 சமூகப் புள்ளி இயல்

சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை அறியவும் அதனை புரிந்து கொள்ளவும் சமூகப் புள்ளி இயல் விவர பகுப்பாய்வுகள் அடிப்படை கருவியாக விளங்குகின்றது. தனி மனித நிலை குறித்தும் சமூகத்தின் சூழ்நிலை குறித்தும் மனிதனின் பொருளாதார நடத்தையின் மூலமும் சமூக சூழ்நிலையில் இருந்தும் அறிய முடிகிறது. சமூகப் புள்ளி இயல் ஆய்வு குறிப்பாக குழந்தைகள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து பிரிவுகளின் விவரங்களும் சிறப்பாக ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், வீட்டு வசதி, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற விவரங்களும் இவ்வாய்வின் மூலம் கணக்கிடப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்களான தேசிய மாதிரி ஆய்வு, ஆண்டுத் தொழில் ஆய்வு, தொழில் உற்பத்தி குறியீடு, வீட்டுவசதி மற்றும் கட்டட புள்ளி விவரங்கள், கைத்தறி மற்றும் தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

## 1. தேசிய மாதிரி ஆய்வு

தேசிய மாதிரி ஆய்வு, மாநில அளவில் மத்திய அரசின் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் தொழில் நுட்ப வழிகாட்டுதலின்படி செயல்படுகிறது. குடும்பத்தின் நுகர்வுச் செலவு, அமைப்புசாரா தொழில் நிறுவனங்கள், வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை, நிலம் மற்றும் கால்நடை கையிருப்பு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற குடிசை சார்ந்த விவரங்கள் போன்ற பல்வேறு தலைப்புகளில் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும் ஓர் ஒருங்கிணைந்த ஆய்வாகும். மாதிரி ஆய்வுகளின் வாயிலாக கிடைக்கப்பெறும் விவரங்களைக் கொண்டு பல்வேறு பொருள் குறித்து கணிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய மாதிரி ஆய்வு 73–வது சுற்றில் (ஜூலை 2015ல் தொடங்கி ஜூன் 2016 வரை) பதிவு பெறாத, வேளாண் சாராத நிறுவனங்கள் குறித்த ஆய்வு நடைபெற்றதுடன் தற்போது 74–வது சுற்றின் வாயிலாக சேவை நிறுவனங்கள் குறித்த ஆய்வு நடைபெற்று வருகின்றது.

## 2. வீட்டு வசதிப் புள்ளி இயல்

இத்திட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட வீடுகள், தற்போது உள்ள வீடுகளில் மாற்றங்கள் செய்வது போன்ற விவரங்கள் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிடமிருந்து பொது மற்றும் தனியார் துறைகளின் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

இவ்விவரங்கள் கட்டட கட்டமைப்புக்கான கொள்கை முடிவுகள் மேற்கொள்ள அரசுக்கு பயன்படுகிறது.

**3. வீடு கட்டத் தொடங்கும் குறியீடு**

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு திட்ட அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய கட்டிட அமைப்பு மூலம் வீடு கட்டத் தொடங்கும் குறியீடு தமிழகத்தின் தேர்வு செய்யப்பட்ட நகரங்களிலிருந்து புள்ளி விவரங்கள் பெறப்படுகின்றன. இக்குறியீடு பல்வேறுபட்ட துறைகளின் வளர்ச்சியைக் கண்டறிய முக்கிய காரணியாக உள்ளது. மேலும் வீடு கட்டத் தொடங்கும் குறியீட்டு கணக்கீட்டின் நோக்கமானது வீட்டு வசதி திட்டத்தில் நிகழும் மாற்றங்களையும் மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் வளர்ச்சியைக் கண்டறியப் பயன்படுகிறது.

**4. கட்டுமான செலவு குறித்த குறியீட்டெண்**

இக்குறியீட்டெண் கட்டுமான பொருட்கள், தொழிலாளர் மற்றும் இதரச் செலவு ஆகியவற்றின் மூலம் பதினாறு மாவட்டங்களிலிருந்து விவரங்கள் பெறப்பட்டு கணிக்கப்படுகிறது. தமிழகத்தின் கட்டுமான செலவினத்தில் நிலவும் வேறுபாடுகளை அறிய இந்த ஆய்வு முடிவுகள் பயன்படுகின்றன.

## 3.2.8 தொழிற் புள்ளி விவரங்கள்

### 1. ஆண்டுத் தொழில் ஆய்வு

மாநில வருவாய் மதிப்பீட்டிற்கென தொழிற்சாலை சட்டம் 1948 பிரிவு 2m(i) மற்றும் 2m(ii)ன் கீழ் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் முதலீடு, கடன், உற்பத்தி மற்றும் கூடுதல் பெறுமானம், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள் ஆகியவை குறித்து ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்போது, ஆண்டு தொழில் ஆய்வு 2013–14 தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளில் மாதிரி ஆய்வு மூலம் மேற்கண்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இவ்விவரங்கள் தொழிற் உற்பத்தி பிரிவிலிருந்து மாநில வருவாயின் பங்கினை கணிப்பதற்கு உதவுகிறது.

### 2. தொழிற் உற்பத்திக் குறியீட்டெண்

கனிமம், உற்பத்தி மற்றும் மின்சாரம் ஆகிய மூன்று பெரும் தொழில் பிரிவுகளிலிருந்து ஒவ்வொரு மாதமும் உற்பத்தி விவரம் பெறப்பட்டு அதனடிப்படையில் தொழிற் உற்பத்திக் குறியீட்டெண் கணிக்கப்படுகிறது. கனிமம் தொகுப்பில் பதினான்கு வகையான விவரங்களும், உற்பத்தி தொகுப்பில் 272 தொழிற்சாலைகளிலிருந்து விவரங்களும் மற்றும் மின்சாரத் தொகுப்பில் ஒரு வகைக்கும், மாதாந்திர உற்பத்தி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இவ்விவரத்திலிருந்து குறுகிய கால தொழிற் உற்பத்தி வளர்ச்சியினை கணிக்க முடிகிறது.

## 3. கைத்தறிப் புள்ளி விவரம்

கைத்தறித் திட்டத்திலிருந்து கைத்தறி துணியின் உற்பத்தி, விற்பனை மற்றும் இருப்பு ஆகிய விவரங்கள் காலாண்டுதோறும் சேகரிக்கப்படுகிறது. இவ்விவரங்கள் 178 குவி மையங்களிலிருந்து (சென்னை, கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக) சேகரிக்கப்பட்டு நெசவாளர்களின் சமுதாய பொருளாதார நிலை குறித்த ஆய்வு ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்படுகின்றது.

## 3.2.9 பொருளாதாரக் கணக்கெடுப்பு

பொருளாதாரக் கணக்கெடுப்பு இத்துறையால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. அமைப்புசாரா நிறுவனங்களின் எண்ணிக்கை அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகியவைப் பற்றிய விரிவான புள்ளி விவரக் கட்டமைப்பை உருவாக்குவதே பொருளாதாரக் கணக்கெடுப்பின் நோக்கமாகும். இவ்விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய வருவாய் மதிப்பீடுகளில் அமைப்புசாரா துறையின் பங்களிப்பை கணிப்பதற்குத் தேவையான தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் தேவையான நிறுவன புள்ளி விவரங்கள் குறிப்பாக அமைப்புசாரா துறை, அவற்றில் வேலைவாய்ப்பு நிலை பற்றிய விவரங்கள் இக்கணக்கெடுப்பின் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

### 3.2.10. வெளியீடுகள்

இத்துறையிலிருந்து முக்கியமாக தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு, ஆண்டு புள்ளி இயல் தொகுப்பு, பருவமும் மற்றும் பயிரும் பற்றிய அறிக்கை, மாவட்ட புள்ளி இயல் கையேடு, வட்டாரப் புள்ளி இயல் கையேடு ஆகிய வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன.

### 3.2.11 இந்திய புள்ளி இயல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டம்

இத்திட்டமானது மத்திய அரசினால் செயல்படுத்தப் படும் திட்டமாகும். மத்திய மற்றும் மாநில புள்ளி விவர அமைப்பு ஒருங்கிணைப்பிற்கும் மாநில பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, தமிழக அரசு மத்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரூ.40.76 கோடி மதிப்பீட்டிற்க்கு 28.09.2011-ல் ஏற்படுத்தியது. தற்போது, மத்திய அரசு வழங்கியுள்ள அறிவுரைகளின்படி, திருத்திய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ரூ.40.76 கோடியிலிருந்து ரூ.24.15 கோடியாக (ரூ.19.31 கோடி மத்திய அரசின் பங்கு மற்றும் ரூ.4.84 கோடி மாநில அரசின் பங்கு) குறைக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அனைத்து இனங்களையும் செயல் படுத்துவதை உறுதி செய்யும் வகையிலும் மற்றும் மத்திய நிதியுதவியில் ஏற்படும் குறைவினை சரிசெய்யும் பொருட்டும் மாநில அரசு கட்டாயம் அளிக்க வேண்டிய தொகையான ரூ.4.84 கோடிக்கு அதிகமாக ரூ.14.52 கோடியினை வழங்கியுள்ளது.

### 3.2.12 மனித வள மேம்பாடு

இத்துறை பணிகளை திறம்பட செயல்படுத்துவதற்கு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் செயல்பாடு இன்றியமையாததாகும். ஆகவே, திறனுள்ள அலுவலர்களை துறையில் நியமிக்கும் வகையில் இருபத்திரண்டு புள்ளி இயல் உதவி இயக்குநர்கள் நேரடி நியமனம் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலிருந்து நியமனம் செய்யப்பட்டனர். மேலும், இத்தேர்வாணையத்தின் மூலம் 268 புள்ளி இயல் உதவி ஆய்வாளர்கள் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர்.

### 3.2.13 தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம்

இத்துறையின் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சி அளிக்க வேண்டி 'தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம்' நிறுவப்பட்டு, தற்பொழுது அரசால் ஒப்பளிக்கப்பட்ட பதவிகளில் இயக்குநர் மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டு 01.05.2012 முதல் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை தலைமையிட வளாகத்தில் இப்பயிற்சி நிறுவனம் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. இந்நிறுவனத்திற்கு, 2015–16ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திருத்திய மதிப்பீடு ரூ.44.59 இலட்சம் ஆகும். இம்மதிப்பீட்டுத் தொகையில், பதிமூன்று விதமான பயிற்சிகள் பதினேழு தொகுதிகளாக நடத்தப்பட்டு 503 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 2016–17 ஆம் நிதியாண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இப்பயிற்சி நிறுவனத்திற்கு ரூ.58.63 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனம், இத்துறை பணியாளர்களுக்கு உரிய கால இடைவெளியில்

பின்வரும் பயிற்சிகளை பல்வேறு துறை வல்லுநர்களின் உதவியுடன் செயல்படுத்தி வருகின்றது.

- பொருளாதாரம் மற்றும் புள்ளிஇயல் தொடர்பான அடிப்படைக் கொள்கைகள், அலுவலக புள்ளிஇயல் அமைப்பு, அது தொடர்பான முறைகள், காரணங்கள் பகுத்தாய்தல் தொடர்பு திறமைகள், அறிக்கை தயாரிக்கும் திறமைகள் போன்றவற்றில் அறிமுகப் பயிற்சிகள்.

- தேவை அடிப்படையிலான குறுகிய கால பயிற்சிகள் முறையே தேசிய மாதிரி ஆய்வு, மாநில வருவாய் கணக்கீட்டு முறைகள், புள்ளி இயல் தொகுப்புகளின் பயன்பாடுகள், மென்பொருள் உருவாக்குதல், தகவல் விவரங்களை பாதுகாத்தல் மற்றும் கணினி மேலாண்மை.

## 3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதியளித்து நிறைவேற்றி வருகின்றன. அந்தத் திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை நுட்பத்துடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். எனவே, இத்திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கும் கொள்கைகள் வகுப்பதற்கும் அரசுக்கு மதிப்பீட்டாய்வுகளை மேற்கொண்டு உதவும் பொறுப்பினை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**3.3.1 இத்துறையின் முக்கியப் பணிகளாவன:**

(i) மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

(ii) குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்; மற்றும்

(iii) வருடாந்திர வெளியீடான 'தமிழ்நாடு – ஓர் பொருளாதார ஆய்வறிக்கை' ஆவணத்தை தயாரித்து வெளியிடுதல்.

**3. 3.2 கீழ்க்கண்ட நோக்கங்களைக் கண்டறிவதற்காக மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன.**

i. திட்ட வடிவமைப்பு

ii. திட்ட செயல்முறை மற்றும் செயல் விளைவுகளை மதிப்பிடல்

iii. செயல் இலக்கு மற்றும் நிதி இலக்கில் காணப்படும் முன்னேற்றம்

iv. திட்ட நோக்கம் நிறைவேற்றல்

v. திட்டப்பயன்கள் குறிப்பிட்ட பயனாளிகளைச் சென்றடைகின்றனவா என்று ஆய்வது மற்றும் திட்டத்தின் செலவு பயன் பகுப்பாய்வு செய்வது.

**3.3.3** ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட முடிவுகளும், ஆலோசனைகளும் திட்டத்தைச் செயல்படுத்துபவர்கள்

திட்டத்தை முறைப்படுத்தி பயனுள்ள வகையில் செயல்படுத்த உதவுகின்றன. இத்துறையால், இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, மே – **2016** வரை, பல்வேறு துறைகளைச் சார்ந்த **745** மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மதிப்பீட்டாய்வுகள் சமூகநலம், சுகாதாரம், நீர்ப்பாசனம், வேளாண்மை, வனம், கல்வி, வீட்டுவசதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தோட்டக்கலை, போக்குவரத்து, ஊரக வளர்ச்சி, உள்பட பல்வேறு துறைகளின் திட்டங்களை சார்ந்ததாகும்.

### 3.3.4 2015–16 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் (TANII):

இத்திட்டத்தின் கீழ் அரசு ஆணை எண்.7, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (புஇ(ம)ம) துறை, நாள் **19.01.2016** மின்னணு முறையில் விவரங்கள் சேகரிப்பதற்கும் இத்துறையின் ஊழியர்களுக்கு புதிய தொழில்நுட்ப பயிற்சி அளிப்பதற்கும் அரசின் மூலம் ரூ.**7.88** இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் (TANII) திட்டத்தின் கீழ் **2016–17** ஆம் ஆண்டிற்கு மின் வழி மதிப்பீடு அமைப்புக்கான ரூபாய் **41.00** இலட்சம் வலைதளம், சமூக அறிவியலுக்கான புள்ளியியல் தொகுப்பு (SPSS) மென்பொருள், ஆலோசனை மற்றும் பராமரிப்பு மற்றும் பயிற்சி போன்றவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளது.

### 3.3.5 புத்தாக்க முயற்சிகள்:

1. அரசாணை நிலை எண்.78, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை (புஇ2(ம)ம) நாள் 16.09.2015ன்படி,

   i மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையில் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகளின் பட்டியலை இறுதி செய்வது மற்றும் இத்துறையின் செயல்பாடுகளை ஆய்வு செய்வது குறித்தும் மாநில மதிப்பீட்டுக் குழு (SEC) மாற்றி அமைக்கப்பட்டது.

   ii மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB) புதியதாக உருவாக்கப்பட்டு இத்துறையில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் நிலை மற்றும் கண்டறியப்படும் ஆய்வின் முடிவுகளை ஆய்வு செய்து வருகிறது.

2. இத்துறை தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் இணைந்து மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டி பதிவேடு உருவாக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3. இத்துறை தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் இணைந்து நடப்பில் உள்ள துறையின் கையேடு மற்றும் மதிப்பீட்டு முறைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

**4.** ஆய்வுக்கான புள்ளிவிவர சேகரிப்பை மேம்படுத்த தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு மூலம் இத்துறையின் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுவதும் மற்றும் தொழில் நுட்ப வழிகாட்டுதலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**5.** ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பின் வழிகாட்டுதலின்படி, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறையானது தமிழ்நாட்டில் உள்ள குழந்தைகளின் **(0–6** வயது**)** ஊட்டச்சத்து நிலை குறித்து மிக பெரிய அளவிலான கணக்கெடுப்பு மற்றும் அங்கன்வாடி மையங்களின் செயல்பாடு குறித்து ஆய்வினை செயல்படுத்தி வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.

**6.** வெளி நிறுவனங்கள் மூலம் ஆய்வுகள் மேற்கொள்வதற்கு அரசின் மூலம் தெரிவு செய்யப்பட்ட மதிப்பீட்டு ஆய்வு நிறுவனங்களின் மூலம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**7.** ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்ட ஆய்விற்கு தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு உருவாக்கி வகுத்துத்தந்த திட்ட வரைவுரை வேண்டுதல் (RFP) படிவங்களை பயன்படுத்தி மூன்று மதிப்பீட்டாய்வுகள் துவங்கப்பட உள்ளது.

i தொடர் மற்றும் விரிவான மதிப்பீட்டு ஆய்வினை (CCE) பத்தாம் வகுப்பிற்கு கொண்டு செல்வதற்கான ஆய்வு மேற்கொள்வது.

ii மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்திற்கான ஆய்வு மற்றும் அதில் கிராமப்புற விவசாயிகளின் கூலி மற்றும் வேலை அளிப்பு மற்றும்

iii திருமாங்கல்யம் திட்டத்தின்கீழ் (தாலிக்கு தங்கம்) விலையில்லா தங்க நாணயம் வழங்குதல் குறித்த ஆய்வு.

### 3.3.6 2016–17 ஆம் ஆண்டிற்கான ஆய்வுகள்:

2016–17 ஆம் ஆண்டில் வேளாண்மை, வனம், கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் மற்றும் தொழில்துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த சுமார் 12 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவை தவிர, ‘‘தமிழ்நாடு – ஓர் பொருளாதார ஆய்வறிக்கை’’ தயாரித்து வெளியிடும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3.4 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

சென்னைப் பெருநகரம் அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இதனால் சாலைகளில் போக்குவரத்தின் அளவும் அதிகரித்து வருவதால், போக்குவரத்து கட்டமைப்பு அதிக அளவில் தேவைப்படுகின்றது. இந்த தேவையைப் பூர்த்தி செய்வதன் முதற்கட்டமாக, ஒரு புதிய துரித இரயில் போக்குவரத்துத் தேவையின் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை

நிறைவேற்றிட முடிவு செய்தது. இந்தத் திட்டத்தின் குறிக்கோள் சென்னைப் பெருநகர மக்களுக்கு வேகமான, நம்பத்தக்க, வசதியான, திறன்மிக்க மற்றும் சிக்கனமான பொதுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது ஆகும். மேலும் இத்திட்டம் இதரப் பொது மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளாகிய, பேருந்து, புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டங்களுடனும், மேலும் எதிர்காலத்தில் மோனோ இரயில் உள்ளிட்ட கூடுதல் இரயில் அமைப்புகளுடனும் சீரிய முறையில் ஒருங்கிணைக்கப்படும்.

டில்லி மெட்ரோ இரயில் நிறுவனம் (சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முதன்மை ஆலோசகர்) தயார் செய்து வழங்கிய விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் இரண்டு வழித்தடங்கள் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–1 –ன் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை 23.1 கி.மீ நீளத்திலும் மற்றும் சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரை 22.0 கி.மீ நீளத்திலும் இந்த வழித்தடங்களில் கீழ்காணும் நிறுத்த நிலையங்கள் அமைந்துள்ளது.

| | |
|---|---|
| வழித்தடம்–1: | வண்ணாரப்பேட்டை – மண்ணடி – உயர்நீதி மன்றம் – **சென்னை சென்ட்ரல்** – அரசினர் தோட்டம் – எல்.ஐ.சி. – ஆயிரம் விளக்கு – ஏ.ஜி–டி.எம்.எஸ் – தேனாம்பேட்டை – நந்தனம் – சைதாப்பேட்டை – சின்னமலை – கிண்டி – **ஆலந்தூர்** – நங்கநல்லூர் சாலை – மீனம்பாக்கம் – சென்னை விமானநிலையம் ; மற்றும் |

வழித்தடம்–2: **சென்னை சென்ட்ரல்** – எழும்பூர் – நேரு பூங்கா – கீழ்ப்பாக்கம் – பச்சையப்பன் கல்லூரி – செனாய்நகர் – அண்ணாநகர் கிழக்கு – அண்ணாநகர் கோபுரம் – திருமங்கலம் – கோயம்பேடு – புறநகர் பேருந்து நிலையம் – அரும்பாக்கம் – வடபழனி – அசோக் நகர் – ஈக்காட்டுதாங்கல் – **ஆலந்தூர்** – பரங்கிமலை.

மேற்கண்டுள்ள இரண்டு வழித்தடங்களும் சென்னை சென்ட்ரல் மற்றும் ஆலந்தூரில் ஒன்றாக இணையும். வழித்தடம்–1–ல் வண்ணாரப்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலுள்ள பகுதி மற்றும் வழித்தடம்–2–ல் சென்னை சென்ட்ரல் முதல் திருமங்கலம் வரையிலுள்ள பகுதி நிலத்திற்கடியிலும் எஞ்சியுள்ள பகுதிகள் உயர்த்தப்பட்ட நிலையிலும் செயல்படுத்தப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு வழித்தடங்களுக்கும் தமிழ்நாடு அரசு தனது கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியதைத் தொடர்ந்து, மத்திய அரசின் நிதியுதவி மற்றும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெறுவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. இத்திட்டத்தினை மத்திய அரசும் மாநில அரசும் கூட்டாக இணைந்து 14,600 கோடி ரூபாய் செலவில் கட்டிமுடிப்பதற்கு மத்திய அரசு தனது நிர்வாக ஒப்புதலை பிப்ரவரி 2009–ல் வழங்கியது. ஏற்கனவே அமைக்கப்பட்ட சிறப்புவகை நிறுவனத்தை (Special Purpose Vehicle) ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு திட்ட மதிப்பீட்டில் 15

சதவிகிதத்தை பங்கு மூலதனமாகவும், 5 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டது. அதே போன்று தமிழ்நாடு அரசும் திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதத்தைப் பங்கு மூலதனமாகவும், 5.78 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டது. மீதமுள்ள 59.22 சதவிகிதத்தை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து (Japan International Cooperation Agency) வெளிநாட்டு கடனுதவி பெறப்பட்டுள்ளது.

## செலவினம் / செயல் முன்னேற்றம்

தமிழ்நாடு அரசு 2383.09 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும் 1854.22 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு 30.6.2016 வரை 1950.53 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும், 365.55 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் மற்றும் 7094.74 கோடி ரூபாயை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக் கடனாகப் பெறப்பட்டுள்ளது.

பெரிய அளவிலான கட்டுமானம் மற்றும் அமைப்பு சார்ந்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் 98 சதவிகிதமும், கோயம்பேட்டில் உள்ள பணிமனை கட்டுமானங்கள் 100 சதவிகிதமும், நிலத்தடி நிலையங்கள் மற்றும் தொடர்புடைய சுரங்கப்பாதைகளின் கட்டுமானப் பணிகள் 65 சதவிகிதமும் முடிவுற்றுள்ளன. 2015–16 ஆம் ஆண்டு இறுதிவரை ஒட்டுமொத்த செயலாக்க சாதனை 85 சதவிகிதமாகும். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயிலை பன்முக போக்குவரத்துகளான பேருந்து, புறநகர் இரயில்,

பெருந்திரள் இரயில் மற்றும் மோனோ இரயிலுடன் ஒருங்கிணைப்பதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனால் பயணிகள் ஒரு போக்குவரத்திலிருந்து மற்றொன்றிற்கு சிரமமேதுமின்றி மாறிச் செல்ல வசதியாக இருக்கும்.

**பயணிகள் சேவையைத் துவக்கி வைத்தல்**

வரலாற்று நிகழ்ச்சியாக, கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான (10.15 கி.மீ) உயர்த்தப்பட்ட வழித்தடப் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29.6.2015 அன்று பயணிகள் சேவையை துவக்கி வைத்தார்கள். மீதமுள்ள உயர்த்தப்பட்ட வழித்தடங்களான சின்னமலை முதல் சென்னை விமான நிலையம் மற்றும் ஆலந்தூர் முதல் புனித தோமையார் மலை வரையில் அடுத்த மாதம் துவக்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிலத்தடி வழித்தடங்களில் பயணிகள் சேவை பல்வேறு நிலைகளில் துவக்கப்பட்டு 2017–ம் ஆண்டின் இறுதி வாக்கில் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கட்டம்–I இன் நீட்டிப்பு**

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் வழித்தடம்–1–ஐ தற்போதுள்ள வடக்கு முனையமான வண்ணாரப் பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையில் (9.051 கி.மீ), ரூ.3770 கோடி செலவில் நீட்டிப்பதற்கான கருத்துருவினை தமிழ்நாடு அரசும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனமும் மத்திய அரசின் சட்டரீதியான ஒப்புதலுக்காகவும் நிர்வாக ஒப்புதல் வழங்கும் பொருட்டும் முன்மொழிந்திருந்தது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு

**15–6–2016** அன்று நிர்வாக ஒப்புதல் அளித்தது. வண்ணாரப் பேட்டையிலிருந்து கொருக்குப்பேட்டை வரையிலான நிலத்தடி வழித்தடங்கள் / நிலையங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் வழங்கியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நீட்டிப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியதோடல்லாமல், கட்டுமானப் பணிகளையும் **23–7–2016** அன்று துவக்கி வைத்துள்ளார்கள்.

**கட்டம்–2**

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட வழித்தடங்களைச் செயல்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்காக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் திட்டம் தயாரிப்பதற்கான நிதியிலிருந்து 8 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–2–இல் மொத்தம் 104.5 கி.மீ நீளம் கொண்ட மூன்று வழித்தடங்களைக் கொண்டதாகும். (1) மாதவரம் முதல் சிறுசேரி வரை (பழைய மகாபலிபுரம் சாலை வழியாக), (2) சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் கலங்கரை விளக்கம் வரை (3) மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டு, ஆலோசனை நிறுவனம் வழித்தட அமைப்பு நிலையங்களின் உத்தேசத் திட்டங்கள் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறது. தற்போது 100 சதவீத ஆரம்பக் கட்ட ஆய்வுப் பணிகள் முடிவு பெற்றுள்ளன. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு

வருகிறது, அவ்வறிக்கை நவம்பர், **2016**–ல் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிணையாக, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–**2**–ற்காக தமிழ்நாடு அரசு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து “புதிய அலுவல் மேம்பாட்டு கடனுதவி”–யின் அடிப்படையில் இலகுவான கடனைப் பெறுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் **2016**–ஆம் ஆண்டுக்கான சுழல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**ஓ. பன்னீர்செல்வம்**
**நிதி, பணியாளர் மற்றும்**
**நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்**